Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1187)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 தை 02 திங்கட்கிழமை (16.01.2012) பக்கங்கள் 16 ஓசை - 107

இடமாற்றத்தில் முறைகேடு 04




தீர்வின்றிய பேச்சு 08





இளவரசரின் மனைவிக்கும் 13



பெருமை 14

## தைப்பொங்கல் தினத்தன்று தீ விபத்து அழகுசாதன நிலையம் எரிந்து நாசம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள அழகு சாதனப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் தைப்பொங்கல் தினமான நேற்றுக் காலை ஏற்பட்ட தீ விபத்தில் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, தைப்பொங்கல் தினமர்கிய நேற்று கடை உரிமையாளரும், அவரது மகனும் கடைக்குச் சென்று தீபம் ஏற்றி விட்டுச் சென்றுள்ளனர். உரிமையாளர் அவ்விடத்தை விட்டுச் சென்ற சில மணி நேரங்களில் இவ்வனர்த்தம் (15ஆம் பக்கம் பார்க்க)

## மதிலுடன் மோதியது மோ.சைக்கிள் வியாபாரி பரிதாபகரமாக மரணம்

(வடமராட்சி)



கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடிக்கும், கரவெட்டி பிரதேச செயலகத்திற்கும் இடைப்பட்ட வீதியில் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் `கரணவாய் மேற்கு வல்லியாவத்தையைச் சேர்ந்த செல்லன் கேதீஸ்வரன் (வயது-34) என்பவர் மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

தனது வீட்டிலிருந்து பச்சை மிளகாய் பையை மோட்டார் சைக்கிளின் முன்னுக்கு ஏற்றிக்கொண்டு (15ஆம் பக்கம் பார்க்க)

## இன்று வருகிறார் கிருஷ்ணா

நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்க இன்று வருகை தரவுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை நடத்துவதுடன், இந்திய நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களையும் ஆரம்பித்து வைப்பார் என கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இன்று வரும் அமைச்சர் கிருஷ்ணா எதிர்வரும் 19 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார். இதன்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் டி.எம்.ஜயரட்ண, வெளியுற அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை யும் சந்திக்கவுள்ளார். அத்துடன், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் (15ஆம் பக்கம் பார்க்க)

# இராஜதந்திர சிறப்புரிமைகளின் பிரகாரம் ஜனாதிபதி மீது வழக்குத் தொடர முடியாது

## அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

போர்க்குற்ற வழக்கிலிருந்து விலக்குப் பெறுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இராஜதந்திர சிறப்புரிமை உள்ளதாக அமெரிக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் கொலம்பிய மாவட்ட நீதிமன்றத்தில் காசிப்பிள்ளை மனோகரன் மற்றும் இருவரால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தொடுக்கப்பட்ட போர்க்குற்ற வழக்கிலேயே, ஜனாதிபதிக்கு இராஜதந்திர சிறப்புரிமை உள்ளதென அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் நீதித் திணைக்கள சட்ட ஆலோசகர் ஹரோல்ட் ஹோ கொலம்பிய மாவட்ட நீதிமன்றத்துக்குப் பரிந்துரைத்துள்ளார்.

இந்த வழக்கை விசாரித்து வரும் கொலம்பியா மாவட்ட நீதிபதி கொலீன் கொல்லர் கொட்டேலி, இந்த விவகாரத்தில் இராஜாங்கத் திணைக்களத்தின் பரிந்துரைகளை ஜனவரி 13 ஆம் திகதிக்கு முன்னர் தெரியப்படுத்துமாறு கேட்டிருந்தார்.

இந்தநிலையில் கடந்த வெள்ளியன்று அமெரிக்க நீதித்திணைக்களத்தின் உதவி சட்டமா அதிபர் ரொனி வெஸ்ட் மற்றும் பிரதி கிளை பணிப்பாளர் வின்ஸ் எம். காலர்வே ஆகியோர் ஜனாதிபதி மகிந்தவிற்குள்ள இராஜதந்திர சிறப்புரிமை குறித்த பரிந்துரைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இதையடுத்து நீதிபதி கொட்டேலி, இந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு ஜனாதிபதிக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்யலாம் என நீதிமன்ற வட்டாரங்கள் கூறியுள்ளன.

## யாழ்ப்பாணத் திருவிழாவில் பெருந்திரளானோர் பங்கேற்பு





(யாழ்ப்பாணம்)

தமிழர் திருநாளாம் தைப் பொங்கலை முன்னிட்டு யாழ். மாநகர சபை கடந்த மூன்று நாட்களாக யாழ்.நகரில் நடத்திய யாழ்ப்பாணத்திருவிழாவின் நேற்றைய மூன்றாம் நாளான நிறைவு விழாவில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

நேற்றைய நிறைவுநாள் நிகழ்வு மாலை 5.00 மணியளவில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் ஆரம்பமானது. இதில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக வடமாகாண ஆளுனர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வாழ்நாள் பேராசிரியர்களான பொ.பாலசுந்தரம்பிள்ளை, அ.சண்முகதாஸ் மற்றும் துறைசார்ந்த அறிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள், பொது மக்கள் எனப் பெருந்திரளானோர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்றங்களை முன்னிலைப்படுத்தி அரசியல் தீர்வினைப் பெறமுடியாது

### என்கிறார் மாவை எம்.பி.

(வவுனியா)

போர்க்குற்றங்களை முன்னிலைப்படுத்தி செயற்படுவதால் மட்டும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு கிடைத்துவிடும் என எண்ணிவிட முடியாது என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் செயலாளருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் வகையில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விவகாரத்தில் பல்வேறு வகையான இராஜதந்திர (15ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புடனான பேச்சில் இந்தியா நெருக்கடி தரவில்லை

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் நடத்திவரும் பேச்சுவார்த்தைகளில் இந்தியா எவ்வித செல்வாக்கையும் செலுத்தவில்லையென அரச தரப்பின் பேச்சுக்குழுவின் தலைவரும், அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் செயற்படுவது கொடுக்கல் வாங்கல்கள் செய்துகொள்வது அனைத்தும் இந்தியாவை ஒரு நண்பனாகவும், சமமான தரப்பு எனக் கருதிய வகையிலேயே ஆகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனிப்பட்ட கருத்துக்களிலிருந்து விலக வேண்டும். பிரச்சினைகளை கலந்துரையாடல் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும். (15ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் அபிலாஷைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது


(கொழும்பு)



அரசின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகளை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது. அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை என்பது இனப்பிரச்சினைக்கானதோர் அரசியல் தீர்வை நோக்கியதாக அமையுமாயின் அதில் முஸ்லிம்களும் மூன்றாந் தரப்பாக சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமான எம்.ரி. ஹஸன் அலி தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கவே அரசு ஓர் இனத்துடன் பேசுகின்றதென்றால், இதில் (15ஆம் பக்கம் பார்க்க)

# ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தலைமையகத்தில் "பாற்சோறு பொங்கி" தைத்திருநாள்



(யாழ்ப்பாணம்)

தைத்திருநாள் விழாவானது யாழ்ப்பாணத்திலுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமையகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தலைமையில் பாற்சோறு பொங்கிக் கொண்டாடப்பட்டது.

நேற்று அதிகாலை ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்டின் (உதயன்), ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) பிரதேச அமைப்பாளர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள், அவர்தம் குடும்பத்தினர் திரண்டிருந்த நிலையில பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

யாழ். தலைமைப் பணிமனையின் பிரதான வாயிலில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பொங்கல் பானையில் அரிசி இட்டு தைத்திருநாள் நிகழ்வில் பங்குகொண்டார். இதனைத் தொடர்ந்து அங்கு திரண்டிருந்தோர் மற்றும் பணிமனைக்கு வருகை தந்த அனைவருக்கும் பாற்சோறு சிற்றுண்டிகள் பழவகைகள் பரிமாறப்பட்டு பொங்கல் விழா மகிழ்ச்சிகரமாக கொண்டாடப்பட்டது. இவ்வேளை அமைச்சரவர்கள் அங்கு வருகைதந்திருந்த அனைவருக்கும் பொங் கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டதுடன், அங்கு திரண்டிருந்தோரும் ஒருவருக்கொருவர் பொங்கல் வாழ்த்துக்க ளைப் பரிமாறிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பட்டிப் பொங்கல் விழா

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோயிலில் பட்டிப் பொங்கல். விழா இன்று திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது. ஆலய முன்றலில் பசுக்களுக்குப் பூசையும் வழிபாடுகளும், பொங்கல் நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இப் பிரதேச மக்கள் தங்கள் பசுக்களைக் குளிப்பாட்டி அலங்கரித்து நடைபெறும் "கோ பூசையில்" கலந்துகொள்ள வைக்கின்றனர். அத்துடன் இப்பூசை நிகழ்வில் குழந்தைக் கண்ணன் உள்வீதி வலம்வந்தும், பசுக்களை இரட்சிப்பதற்கு வெளிவீதிக்கும் செல்வார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பதிவு செய்யாத படகுமூலம் மீன்பிடித்தவர்களுக்கு அபராதம்

பதிவுசெய்யாத படகுகள் மூலம் கடலில் மீன்பிடித்த நான்கு குருநகர் மீனவர்களுக்கு 28000 ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

மீன்பிடித்துறையின் 8 ஆம் சட்டக் கட்டளைப்படி அத்துமீறி மீன்பிடித்த குற்றத்திற்காகவும், குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டமைக்கு அமைவாகவும் ஒவ்வொருவருக்கும் தலா 7 ஆயிரம ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டு நீதவான் தீர்ப்பளித்தார. (எஸ்)

# சிறைச்சாலையில் தைப்பொங்கல்

சிறைக்கைதிகளின் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் தைப் பொங்கல் நிகழ்வு சிறைச்சாலை அத்தியட்சகர் செனவிரட்ண தலைமையில் நேற்றுக்காலை யாழ். சிறைச்சாலையில் இடம் பெற்றது.

சிறைச்சாலையில் சிறு குற்றங்கள் புரிந்த கைதிகள் மற்றும் ஆயுள் கைதிகளைப் பார்வையிட்டு அவர்களின் தேவைகளையும், குறைகளையும் தீர்க்கும் நோக்கத்துடன் சட்ட உதவி ஆணைக்குழுத் தலைவி சாந்த அபிமன்னசிங்கம் சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்டுடார்.

யாழ். சிறைச்சாலையில் இருக்கும் 235 கைதிகள் தமது பிரச்சினைகளையும், தேவைகளையும் அவரிடம் தெரிவித்தனர்.

கடந்த சில காலங்களில் சிறு குற்றம் புரிந்து தண்டனை பெறும ஒரு சிறுவன் தனது பிரச்சினையை கண்ணீர் மல்கத் தெரிவிக்கையில்,

நான் செய்யாத குற்றத்திற்காகத் தண்டனை பெறுகின்றேன். என்னை விளக்கமறியலில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என கோரினான்.

கைதிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த சட்ட உதவி ஆணைக்குழு தலைவி சிறைகைதிகளுக்கான தியான ஒழுங்குகளைச் செய்து தருவதாக உறுதியளித்தார்.

# நீதிமன்ற அபராதம்

நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக குளிர்பாணங்களை விற்ற 3 வியாபாரிகள் கொக்குவில், காங்கேசன்துறை வீதி, யாழ். நகர்ப் பகுதிகளில் வைத்து நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர். வழங்கில் ஒருவரு க்கு இருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா என தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

மேலும் தண்டப்பணம் செலுத்தத் தவறின் சிறைத்தண்டனை வழங்கப்படும்என எச்சரிக்கப்பட்டனர். (எஸ்)

# காசோலை மோசடி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் பொருட்கள் கொள்வனவு செய்த நபர் ஒருவர் காசோலை மோசடி செயததாக யாழ். பொலிஸ் நிலையததில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபர் ஒரு இலட்சத்து 32 ஆயிரம் ரூபாவிற்குப் பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளார். பணத்தினை வங்கியில் பெறுமாறு காசோலை வழங்கியுள்ளார்.

காசோலையைப் பெற்றுக் கொண்ட வர்த்தக உரிமையாளர் வங்கியில் பணத்தினைப் பெற சென்றபோது வங்கியில் பணம் வைப்பிலிடப்படவில்லை.

குறித்த வர்த்தக உரிமையாளரால் மோசடி செய்த வாடிக்கையாளருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எஸ்)

# இந்துசமயப் பொது அறிவுப்போட்டி

இலங்கை முழுவதும் இயங்கிவரும் இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே இந்துசமயப் பொது அறிவுப் போட்டியினை நடத்துவதற்கு இந்து சமய கலாசாரத்திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரபட்டுள்ளன.

மாணவர்களிடையே அறநெறிச் சிந்தனைகளையும், வாழ்வியல் விழுமியங்களையும் வாழ்வில் பின்பற்றவைக்கும் உயரிய நோக்கில் இந்துசமய பொது அறிவுப் போட்டியினை நடத்தவுள்ளதாகப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்த சமய அறிவுப் போட்டி, 2 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்புவரை வகுப்பு ரீதியான தனித்தனியாக நடைபெறவுள்ளது. ஒவ்வொரு வகுப்புகளுக்கும் விடயப்பரப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயப் பரப்புக்கள் இந்துசமயக் கலாசாரத் திணைக்களத்தினால் அந்தந்த வகுப்புக்களிற்கு வழங்கப்பட்ட பாடநூலை அடிப்படையாகக் கொண்டதாகும்.

2 ஆம் வகுப்பு மாணவர்களிற்குச் சைவபோதினியில் பக்கம் 1-38 வரையும், 3 ஆம் வகுப்பு மாணவர்களிற்கு சைவபோதினியில் 38-64 வரையும், 4ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்புவரையுள்ள மாணவர்களிற்கு, அந்தந்த வகுப்புகளிற்கு உரிய சைவ போதினியிலும், 9 ஆம்வகுப்புக்குச் சைவசமயம் எனும் நூலிலும், 10 ஆம் 11ஆம் வகுப்புக்களிற்கு அந்த வகுப்புக்குரிய சைவ சமய நூலிலும் வினாக்கள் அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் 40 புள்ளிகளிற்கு மேல் பெறும் மாணவர்களிற்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனி விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இல 248-1/1, காலிவீதி, கொழும்பு - 4 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். (06)


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1186)

### லொறி விற்பனைக்கு

42 - இலக்கமுடைய TUSKER லொறி விற்பனைக்கு உண்டு.
இல.119, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
0777558864, 0777362749.
(C/1526)

### தவறிவிட்டன

தவரட்ணம் ராஜ்கமல் என்பவருடைய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய கைப்பை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தினமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்
தொடர்புக்கு: த.ராஜ்கமல்,
18/3, மடம் வீதி,
யாழ்ப்பாணம். (C/1525)


# அறநெறிப் பாடசாலைகளின் விபரங்கள் திரட்டல்

இலங்கை முழுவதும் இந்து ஆலயங்களில் இயங்கிவரும் அறநெறிப் பாடசாலைகளின் விபரங்களை அனுப்பிவைக்குமாறு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர், மாணவர் விபரங்களை முக்கியமாகக் கோரப்பட்டுள்ள இக்கோரிக்கைக் கடிதம் பணிப்பாளரினால் சகல அறநெறிப் பாடசாலைகளிற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர், மாணவர் விபரங்களுடன் பாடசாலையின் பெயர், பதிவு இலக்கம், ஆசிரியர்களது இலங்கை வங்கிக் கணக்கு இலக்கமும், கிளையும் போன்ற விடயங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து அறநெறிப் பாடசாலை அதிபர், பிரதேச இந்து கலாசார உத்தியோகத்தர் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பிவைக்கப்படவேண்டும். விண்ணப்பங்கள் யாவும் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், இல. 248-1/1, காலி வீதி, கொழும்பு - 4 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# தொண்டராசிரியர் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் 18 ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள எடிசன் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

நிரந்தர நியமனம் தொடர்பான விடயங்கள் ஆராயப்படவிருப்பதால் தவறாது சகலரையும் சமுகமளிக்குமாறு அவர் அறிவித்துள்ளார். (04)

# மாயாஜால நிகழ்ச்சி



இலங்கை புனித ஜோன் அம்புலன்ஸ் சேவைப் பிரிவினரின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வேலணையில் ஜேர்மன் இளவன்ஸ் நிறுவனத்தின் இசை நிகழ்ச்சியும் மாயாஜால நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

வேலணைப் பிரதேச சபையின் அனுசரணையுடன், இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணைப் பிரதேச சபையின் தவிசாளரும் வேலணைப் பிரதேச ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா (போல்) கலந்து கொண்டார். (85)

**வாழ்க்கையை நாம் எண்ணிய அளவு நீட்டிக் கொண்டு போக முடியாது. ஆகவே இன்னும் இருக்கும் நாட்களை உங்கள் முன்னேற்றத்திற்காகவும், மற்றவர்களுடைய நலனிற்காகவும் விரைந்து பயன்படுத்துங்கள்.**

**- மஹாவீரர்.**

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## குழந்தைகளைப் புரிந்துகொள்வோம்!

நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் என்று வரிசையாகப் பண்டிகைகள் கொண்டாடி ஓய்ந்திருக்கிறோம். குறிப்பாக சிறுவர்களுக்கே கொண்டாட்டம் அதிகம். அதேபோல, பெரும்பாலான குடும்பங்களில் சிறுவர்களுக்காகவே விழாக்கள் கொண்டாடுவதைத் தவிர்க்க முடிவதில்லை.

கைத்தொலைபேசிகளில் எஸ்.எம்.எஸ் மூலம் வாழ்த்துக்களை அனுப்பிவிட்டு தொலைக்காட்சிகளின் முன்னால் அமர்ந்து பண்டிகைகளை கொண்டாடி முடித்துவிடுவோரே அதிகமாகி விட்ட காலம் இது. சிறுவர் பிராயத்தில் பண்டிகைகள் நமக்குத் தந்த மகிழ்ச்சியை நம் குழந்தைகளும் அனுபவிக்கட்டும் என்ற பெருமனம் கொண்டே இந்த மகிழ்ச்சி நாட்கள் இன்றும் நம்வசம் தொடர்கிறது.

ஆனால், பண்டிகைகள் முடிந்து சிறுவர்களை இனி படிப்புச் சுமை அழுத்தப் போகிறது. ஒரு வகுப்பு மேலேறி புதுவகுப்புகளுக்கு நுழைந்திருக்கும் சிறார்கள் புதிய பாடப்புத்தகங்களுடன் மல்லாடப் போகிறார்கள்.

பெற்றோரும் குழந்தைகளை 'படி படி' என்று நசுக்கும் காலம் இது. அவர்கள் முதுகில் ஐந்து கிலோ, பத்து கிலோ என்று பொதி சுமக்க வைக்கிறோம். வீட்டுப் பாடம் எக்கச்சக்கம். பள்ளியில் ஆசிரியர்கள் படி படி என்று எதையோ சொல்லிவைக்க, புரிகிறதோ, புரியவில்லையோ, குழந்தைகள் அரைத் தூக்கத்துடனும் ஆர்வமின்றியும் அதனைப் பின்பற்ற வேண்டிய கட்டாயம்.

மேலதிகமாக பெற்றோருக்கும் வீட்டுப்பாட வேலைகளை வழங்கும் கல்விமுறையினால் பிள்ளைகளோடு பெற்றோரும் சேர்ந்து மல்லாடும்படியாக கல்வி என்பதே வதையாக இருப்பதை இன்னும் மாற்றமுடியவில்லை. அதிலும் போட்டி அதிகமாகி, படிப்பை பாடசாலையுடன் நிறுத்திவிடாமல், ரியூசனுக்கு ஓடி வீட்டுக்கு களைத்து வந்தபிறகும் படிப்பைத் தொடர வேண்டிய பரிதாபநிலை.

பிறகு பரீட்சை, புலமைப்பரிசில் பரீட்சை, அடுத்து என்ன படிப்பு என்று குழந்தைகளை ஆரம்பத்திலேயே பொசுக்கிவிடுகிறோம். பெற்றோரின் நிறைவேறாக் கனவுகளையும் சேர்த்து அவர்கள் சுமக்க வேண்டியிருக்கிறது.

குழந்தைகளின் ஆர்வம் என்னவென்று நாம் கேட்பதே இல்லை. அவர்களின் திறன் எதில் உள்ளது என்பதையும் நாம் கவனிப்பதில்லை. ஹவார்ட் கார்ட்னெர் முன்வைத்த Multiple Intelligence என்ற கருத்தாக்கத்தின்படி, எட்டுவிதமான அறிவுகள் உள்ளன. அதில் சிலதான் அல்லது ஒன்றுதான் ஒரு மனிதருக்கு அதிகமாக இருக்கும். அவை எவை என்று கண்டு பிடித்தால், அதில், அந்தத் துறையில் அந்த மனிதரால் உச்சங்களை அடையமுடியும்.

இன்று எல்லாத் துறைகளிலுமே வாய்ப்புகள் இருக்கும்போது ஒரு குழந்தையை எதை நோக்கிச் செலுத்துவது? முரட்டுத்தனமாக, படி, படி என்று சொல்லிக்கொண்டே இருப்பதா, அல்லது எதில் ஆர்வமும் திறனும் உள்ளதோ அதை நோக்கி ஒரு குழந்தையைச் செலுத்துவதா?

எந்த அடிப்படையில் நம் குழந்தையிடம் இந்தத் திறன் உள்ளது என்று கண்டறியமுடியும்? அதைக் கண்டுகொள்வதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்கிறோமா? படி படி என்று நச்சரிப்பதை விட சிறுவரது விருப்பங்களை அவர்களது திறன்களை அறிந்து அவற்றில் ஊக்கப்படுத்துவது குறித்து எண்ணுவதில்லை, அதற்கு நமக்கு நேரமும் இல்லை.

கல்விமுறையை அரசு மாற்றியமைப்பது இருக்கட்டும். முதலில் நம் பிள்ளைகளுக்கு வழங்கும் கல்வி குறித்தும் பிள்ளைகள் குறித்தும் நாம் தெளிவடைந்தாக வேண்டும்.

- ஆசிரியர்

# வீதிப்போக்குவரத்தில் புதிய விதி நாடாளுமன்றில் சட்ட மூலம்

(கொழும்பு)

போக்குவரத்தில் ஏற்படும் நெருக்கடி மற்றும் விபத்துக்களைக் குறைப்பதற்காக கடைப்பிடிக்க வேண்டிய கட்டாய விதிகளில், மேலும் புதிதாக ஒரு விதி மத்திய சுகாதாரத்துறை அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி வாகனங்களின் ஹோரன் சத்தமானது குறித்த வாகனம் நகரும்போது 105 டெசிபலை விடக் குறைவாகக் காணப்பட வேண்டும். அத்துடன் நிலையாக நிற்கும் வாகனங்களின் ஹோரன் ஒலியானது 93 டெசிபலிற்கு குறைவாகக் காணப்பட வேண்டும் என்பதே அப்புதிய போக்குவரத்து விதியாகும்.

இவ்விதியானது, மிக விரைவில் சுற்றுச்சூழல் அமைச்சினால் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி வைக்கப்படும் என மத்திய சுகாதார அமைச்சின் தலைவர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார். இது ஏற்கனவே அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புகைப் போக்கிகளின் (சைலென்சர்) ஒலியை கட்டுப்படுத்தும் விதியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அமைதியைக் காக்க புறப்படுகின்றது இலங்கையின் விசேட படையணி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் படையுடன் இணைந்து செயற்படவென இலங்கையில் இருந்து மேலும் சில அமைதிகாக்கும் படையினர் ஹெய்டிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

ஹெய்டியிலுள்ள இலங்கை அமைதிகாக்கும் படைகளில் இணைந்து கொள்ளவென 659 படையினர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் கடந்த வாரம் இராணுவ அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய இராணுவத்தினர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஹெய்டியிலுள்ள அமைதி காக்கும் படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். ஹெய்டியில் அமைதிகாக்கும் பணியில் ஈடுபடவென கடந்த 2007ஆம் ஆண்டு ஐ.நா. அமைதிகாக்கும் படை, இலங்கை அமைதிகாக்கும் படை வீரர்கள் 100 பேரை ஏற்றுக்கொண்டது.

## கால்கோள் விழா

(அளவெட்டி)

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் கால்கோள்விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் வேல்சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (93)

# தேசிய அபிவிருத்தியை விரைவுபடுத்த அனைத்துக்கட்சி செயற்குழு அமைப்பு

(கொழும்பு)

அபிவிருத்திப் பணிகளை தேசிய ரீதியாக வெற்றிகரமாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் முன்னெடுப்பதற்காகவும் அனைத்துக் கட்சிக் குழுவொன்று அமைக்கப்படவிருக்கின்றது. தேசிய ரீதியில் பொதுவான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதனை இலக்காகக் கொண்டு, இந்த அனைத்துக் கட்சிக்குழு செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது இந்தக்குழு நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை சமச்சீர் தன்மையுடன் மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சிகளுக்கு மேலதிகமாக சிவில் அமைப்புக்களும் இந்தக் குழுவில் இணைத்துக் கொள்ளப்பட உள்ளன. கட்சி, இன மற்றும் மத பேதங்களின்றி நாட்டின் அபிவிருத்தியை மேற்கொள்ள இந்த அனைத்துக் கட்சிக்குழு நடவடிக்கை எடுக்கும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டால் பல்வேறு கடினமான சவால்களை இலகுவில் வென்றெடுக்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். எனினும், தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரம் தொடர்பில் இந்தக் கட்சிக்குழுவின் பங்களிப்பு எவ்வாறு அமையும் என்பது தொடர்பில் அவர் எந்தக் கருத்துக்களையும் வெளியிடவில்லை.

## மூடப்பட்ட பல்கலைக்கழகம் அடுத்த வாரம் திறக்கப்படலாம்

(கொழும்பு)

மாணவர் பிரச்சினை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ள ஸ்ரீஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தை எதிர்வரும் 23 ஆம் திகதி மீளத்திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களுடன் இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின் பின்னர் பல்கலைககழகத்தை மீளத்திறப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாக உறுப்பினர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுடன் பல்கலைக்கழக நிர்வாக அங்கத்தவர்கள் விசேட பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளனர். பல்கலைக்கழக மாணவர்களின் சத்தியாக்கிரகம், மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகப் பாதுகாப்புத் தரப்பினருக்கு இடையிலான மோதல்கள் காரணமாக சில தினங்களுக்கு முன்னர் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைககழகம் தற்காலிகமாக மூடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# மருந்தாக்கக் கூட்டுத்தாபன தலைவர் மீது ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.அச்சுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபன ஊழியர் ஒருவரின் இடமாற்றம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன தமக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் குற்றஞ் சுமத்தியுள்ளார். முறைகேடான நடவடிக்கைகள் காரணமாக அந்த ஊழியர்களைத் தாம் இடமாற்ற தீர்மானித்ததாக இக்கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்தார்.

இந்த நிலையிலேயே ஜயலத் ஜயவர்தன தமக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக அவர் குறிப்பிட்டார். எனினும் இந்த விடயம் குறித்த ஜயலத ஜயவர்தன கருத்துத் தெரிவிக்கையில் அரசியல் ரீதியாகப் பழிவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் இது தொடர்பில் தாம் விசாரணை மாத்திரமே மேற்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார். எனினும் கூட்டுதாபனத் தலைவரது குற்றச்சாட்டை தான் மறுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## ரயில் திணைக்களத்தின் வருமானம் அதிகரிப்பு

கடந்த ஜனவரி முதல் ஜூலை வரையிலான காலப் பகுதியினுள் சரக்குப் போக்குவரத்தின் ஊடாக, ரயில் திணைக்களம் 27 கோடி ரூபாவினை வருமதியாகப் பெற்றுள்ளது. ரயில் ஊடாக சரக்குகளை இடம்மாற்றுவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சிறந்த முறையில், மேற்கொள்ளப்படுவதன் காரணமாக தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் இந்தச் சேவையை தற்போது அதிகம் நாடுவதாக ரயில் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## இரு பாடசாலைகள் கிழக்கில் உதயம்

(மட்டக்களப்பு)

பொத்துவில் பிரதேசத்தில் இரண்டு புதிய பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தப் புதிய பாடசாலைகள் பொத்துவில் 03 மற்றும் பாக்கியவத்தை 14 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலேயே ஆரம்பிக்கப்படவுள்ளன.

பொத்துவில் பிரதேச சபையின் முயற்சியினால் ஆரம்பிக்கப்படவுள்ள பாடசாலைகளுக்கான, மாகாணக் கட்டமைப்புக் குழுவின் அனுமதி இதுவரை கிடைககப் பெறாமையால், குறித்த அனுமதி கிடைக்கும் வரை பொத்துவில் 03 இலுள்ள பாடசாலை தாறுல் பலாஹ் வித்தியாலயத்தின் கீழும் பாக்கியவத்தை 14ஆம் பிரிவிலுள்ள பாடசாலை அல் கலாம் வித்தியாலயத்தின் கீழும் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

# கிளாலி றோ.க.த.பாடசாலையில் வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா

(கிளிநொச்சி)

கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் என்றிப் திட்டத்தின் கீழ் புதிதாக 50 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.



இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தை திறந்து வைத்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த கிளாலிப் பிரதேசத்தை மீளமைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

அதற்கமைய இங்கு மக்கள் வாழ்வதற்கான சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது. மீள்குடியேறிய காலத்தில் மர நிழல்களில் இயங்கிய பாடசாலைகளில் வரலாறுகள் மட்டுமே பதியப்பட்ட எமது மாவட்டத்தில் பாடசாலையின் ஆரம்பமே புதிய மண்டபத்தில் தொடங்கியதையிட்டு நாம் பெருமை கொள்கிறோம்.

தொடர்ந்து இப்பிரதேசத்திலுள்ள ஆலயங்களும், தேவாலயங்களும் மீண்டும் கட்டியெடுப்பப்பட வேண்டும். அவை அழிவுகளை மட்டும் அனுபவித்த எம் மக்களின் வாழ்வியலை மீண்டும் செழிப்படையச் செய்யும்.

எனவே இப்பகுதியில் மீளக்குடியமராத அனைவரும் இங்கு மீள்குடியேறுவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்திக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் 'பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் அன்ரன் அன்பழகன், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் அலெக்சாண்டர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மற்றும் அதிகாரிகள், பாடசாலை சமூகத்தினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ஆசிரியர்களின் இடமாற்றங்களில் முறைகேடுகள் இருப்பதாக விசனம்

(அச்சுவேலி)

யாழ்.குடாநாட்டில் உள்ள கல்வி வலயங்கள் தோறும் தற்போது அமுல்படுத்தப்பட்டு வரும் உள்ளக இடமாற்றங்களின் போது குறித்த பாடசாலைகளில் 3 வருட சேவையினைக் கூட பூரணமாக நிறைவேற்றாத ஆசிரியர்களுக்கும் இட்மாற்றங்கள் வழங்கப்பட்டிருப்பதாக ஆசிரியர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வெளிமாவட்டங்களில் சுமார் 5 வருடங்கள் சேவையாற்றிய பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள கல்வி வலயங்களிற்கு இடமாற்றம் பெற்று வந்து சேவையாற்றிவந்த ஆசிரியர்களுக்கும் இவ்வாறான இடமாற்றங்கள் வழங்கப்பட்டி ருப்பதானது சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கும் மட்டுமன்றி, கல்விச் சமூகத்தினருக்கும் பெரும் கவலை அளிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இவ்வாறான இடமாற்றங்களின் போது ஆசிரியர்களின் முன்னைய சேவைகளையும் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடமாற்றங்களை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனப் பலரும் விரும்புகின்றனர். (03)

# தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் வாகனத் தரிப்பிடத்தை அமைக்க கோரிக்கை

(அளவெட்டி)

தெல்லிப்பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வரும் நோயளர்கள் வாகனங்களை நிறுத்துவதற்குரிய பாதுகாப்பான இடம் இல்லாது பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுறது.

இவ்வைத்தியசரலைக்கு நாளாந்தம் அதிகளவான வெளிநோயாளர்கள் சிகிச்சைக்காக வரும் நிலையில் அவர்களின் வாகனங்களை குறிப்பாக சைக்கிள், மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி உள்ளிட்ட இதர வாகனங்களை நிறுத்த முடியாது ஒழுங்கற்ற முறையில் நிறுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவ்வாறு நிறுத்தப்படும் வாகனங்கள் காணாமல் போகும் அபாய நிலைகாணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. இதே வேளை, இவ்வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரின் வாகனங்களை நிறுத்துவதற்கும், இங்கு பாதுகாப்பான இடமில்லை எனவும் தெரிவிககப்படுகிறது.

பாதுகாப்பான வாகனத்தரிடப்பிடம் இல்லாததால் தமது வாகனங்கள் வெயிலிலும் மழையிலும் நிறுத்த வேண்டியுள்ளதாகவும், நிறுத்தப்பட்ட வாகனத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதற்கு ஒருவர் நிற்க வேண்டியுள்ளதாகவும், இதனால பல சிரமங்களை எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இவ்வைத்தியசாலைக்குப் பாதுகாப்பான வாகனத் தரிப்பிட நிலையத்தை அமைத்துத் தருமாறு நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (93)

# புதிய நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்னப்பள்ளிவாசல் புதிய நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. நடப்பு வருடத்திற்கான புதிய நிர்வாக சபையில் எம்.எஸ் ஜினூஸ் தலைவராகவும் எம்.ஏ.சி சனூன் செயலாளராகவும் உபதலைவர் எம்.ஜ. ஜாபிர் உபதலைவராகவும் எம்.ரி.இப்திகார் பொருளாளராகவும் எம்.ரிநாவஸ் உதவிப் பொருளாளராகவும் எம்.எஸ்.எம். ஜான்ஸின் எம்.நாசர் ஆலோசகர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஏழு பேர்கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (105)

# பட்டிப் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் பட்டிப் பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.நகர் சத்திரம் ஞானவைரவர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இணையத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், யாழ்மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா சிறப்பு விருந்தினராகவும், பிரியந்த பெர்னாண்டோ கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள, சின்மயா மிஷன் சுவாமிகள், சிவஸ்ரீ கிருபானந்தக் குருக்கள், சிவஸ்ரீ க.செல்வராசக் குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

சிறப்புரைகளை பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணா ஐயர், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன், கலாபூஷணம் சிவமகாலிங்கம, சைவப்புலவர் இ.ஸ்ரீதரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# பலாலி ஆசிரிய கலாசாலையை நிரந்தரமாக மூடுவதற்கு எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டு ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை உருவாக்கி பல்வேறு துன்பங்களைக் கடந்து இப்போதும் தம்பணியைச் செய்து கொண்டிருக்கும் பலாலி ஆசிரிய காலாசாலையை 2012 பெப்ரவரி மாதத்தோடு மூடிவிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை வன்மையாகக் கண்டிப்பதோடு இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளதாவது,

2012 ஆம் ஆண்டு ஜனவரி பதின்மூன்றாம் திகதியுடன் ஒருவருட பயிற்சினைப் பெறவந்த ஆசிரியர்கள் பயற்சி நிறைவடைந்து செல்கையில், 2012 ஆம் ஆண்டுக்குரிய பயிற்சி ஆசிரியர்கள் வருகை தராத நிலையில், பலாலி ஆசிரிய கலாசாலையில் கடமையாற்றும் விரிவுரையாளர்கள் பொருத்தமான இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்றும், அதிபர் இருக்கும் பொருட்களுக்குப் பாதுகாப்பாக இருப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாடு முழுவதும் தொலைக்கல்விப் பயிற்சி நெறியினைத் தொடர்நத ஆசிரிய மாணவர்களுக்குச் செய்முறைகளுடன் கூடிய பாடவிதானங்களை முழுமைப்படுத்துவதற்காக மூன்றுமாத கால பயிற்சிக்காக ஆசிரிய காலாசாலைகளில் 2012 ஜனவரி 16ஆம் திகதி இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இந்த ஆசிரிய மாணவர்களை பலாலி ஆசிரிய கலாசாலையில் இணைப்பதற்கான எந்த அறிவித்தலும் இதுவரை வழங்கப்படவில்லை.

மாறாகச் சென்ற வருடம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஒரு வருட பயிற்சிக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் ஒரு தொகுதியினருக்கு மன்னாரில் தற்காலி இடமொன்றில் வைத்துப் பயிற்சி வழங்கப்பட்டது. இம்மாணவர்களின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை நிர்வாகமே பொறுப்பாக இருந்தது. எவ்வித வளங்களும் இல்லாத நிலையில் மன்னாரில் இயங்கிய அந்த உபநிலையத்தில் கற்ற மாணவர்களும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி பதின்மூன்றாம் திகதியுடன் பயிற்சியை நிறைவு செய்துள்ள நிலையில், தொலைக்கல்விப் பயிற்சி நெறியினைத் தொடர்ந்த ஆசிரிய மாணவர்களுக்குச் செய்முறைகளுடன் கூடிய பாடவிதானங்களை முழுமைப்படுத்துவதற்காக மூன்றுமாத காலப் பயிற்சிக்காக சுமார் 350 ஆசிரிய மாணவர்கள் வடபகுதி ஆசிரிய கலாசாலைகளுக்கு அனுப்பப்படவுள்ளனர் என்கின்ற செய்திக்கு அப்பால், அத்தொகுதி மாணவர்களையும் மன்னாரில் அல்லது புத்தளத்தில் வைத்துப் பயிற்சிகளை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

செய்முறைகளுடன் கூடிய பயிற்சிகளைப் பெறுவதற்கு அனுப்பப்படும் ஆசிரியர்கள் ஆசிரிய கலாசாலை தவிர்ந்த இடங்களில் பயிற்சி பெறுவதில் எவ்வளவு தீமையிருக்கின்றது என்பதனை நீங்களும், கல்விப்புலம் சார்ந்தவர்களும் புரிந்து கொள்வார்கள். ஆசிரிய கலாசாலைகளைத் தேடி மாணவர்கள் செல்லும் நிலைமாறி மாணவர்களைத் தேடி ஆசிரிய கலாசாலைகள் செல்லும் அவலநிலை இன்று உருவாகியுள்ளது. இதனால் பாதிக்கப்ப டபோது அந்த ஆசிரியர்களிடம் கற்கும் மாணவர்களும், எதிர்கால சந்தியினருமே. இதற்கிடையில் பிற மாவட்டங்களில் இருந்து வரப்போகும் பயிற்சி ஆசிரியர்களை தங்களின் சொந்த நலனுக்காகத் தடுத்து நிறுத்தவதற்கு சிலர் முயற்சிப்பதாகவும் நாம் அறிகின்றோம்.

நிரந்தரமாக இயங்குகின்ற ஆசிரிய கலாசாலைகளை மூடுவதற்கான முன் முயற்சிகள் இதுவென்றும் சந்தேகம் எழுகின்றது. இத்தகைய முயற்சியைத் தாங்களும், கல்வி அமைச்சும் அதுசார்ந்த அதிகாரிகளும் கவனத்தில் எடுத்து எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் ஆசிரியர்கள் முறையான பயிற்சிகளை பெறாமல் மாணவர்களுக்குக் கற்பிக்கக்கூடாது என்கின்ற ஆழமான சிந்தனையோடு பலாலி ஆசிரிய கலாசாலையை மூடுகின்ற முயறசியைக் கைவிடவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம். பலாலி ஆசிரிய கலாசாலையின் சொந்த இடத்தினை ஆசிரிய கலாசாலையிடம் ஒப்படைக்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்தால் அதனை நிரந்தரமாக மூடுவததென்று பொருளா? இப்போதைக்குச் சொந்த இடமில்லாமல் இருந்தாலும் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட ஆசிரிய கலாசாலையை மூடுவதற்கு இடமளிக்க முடியாது. நாம் ஒன்றைக் கேட்டால் அதனைத் தராவிட்டாலும், நிம்மதியாக இருக்கவிட்டால் போதும் என்ற நிலையில் இருக்கும் எமக்கு, தொடர்ந்தும் பலாலி ஆசிரிய கலாசாலை இயங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

இக்கலாசாலையில் கற்ற பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் தாம் கற்ற கலாசாலை இதுவென்று சொல்ல முடியாத அளவிற்கு மூடிவிடாதீர்கள் என்ற வினயத்துடன் கேட்டுக்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரிய சங்கத்தின் அறிக்கைப் பிரதிகள் கல்வி அமைச்சர், அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர், வடமாகாண ஆளுநரின் செயலாளர், பிரதம ஆணையாளா, ஆசிரிய கலாசாலைகள் பிரிவு, பிரதம செயலாளர் வடமாகாணம், செயலாளர் வடமாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத துறை அமைச்சு ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கல்



(அளவெட்டி)

சேவாலங்கா மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கண்ணி வெடி அகற்றப்பட்ட பிரதேச மக்களுக்கான ஒருங்கிணைந்த வாழ்வாதாரத்திட்டத்தின் கீழ் தெல்லிப்பளைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

கல்லோரஸ்ட் நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் 30 பயனாளிகளுக்கு 10 நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தெல்லிப்பளை பிரதேச செயலர் திருமதி எழிலரசி மற்றும் ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் வடக்கு அமைப்பாளர் ஜெயபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர். (93)

# சிறந்த முறையில் வழிகாட்டல்கள் இல்லாமையே மாணவர் தவறான வழிக்குச் செல்லக்காரணம்

## நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர்


(யாழ்ப்பாணம்)

மாணவர்களது கல்வி முன்னேற்றம் பாடசாலைகளினதும் பெற்றோர்களினதும் ஒத்துழைப்பான பங்களிப்பில் தங்கியுள்ளது என நெல்லியடி மத்திய மகாவித்தியாலய தேசியப் பாடசாலையின் அதிபர் செ.சேதுராஜா தெரிவித்துள்ளார். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தரம் 6இல் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு அண்மையில் கல்லூரிக்கலையரங்கில் வகுப்பு இணைப்பாளர் ஆசிரியை தயா கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர்தொடர்ந்து உரையாற்றுகையில்:

கடந்த காலங்களில் கல்வியில் சாதனை படைத்த மாணவர்கள் பெற்றோர்களினதும் பாடசாலைகளினதும் வலுவான கவனத்தைப் பெற்றவர்கள் என்பதனை மறந்துவிடலாகாது. உன்னதமான கனவுகளோடு மாணவர்களை ஆரம்ப வகுப்புக்களில் சேர்க்கின்றபெற்றோர் காலப் போக்கில் அவர்களது கல்வியை எவ்வாறு கவனிப்பது என்பதனை உணராது மெல்ல மெல்ல தமது கவனத்தைக் கைவிட்டு விடுகின்றனர்.

பிள்ளைகள் பதின்ம வயதினை அடைகின்றபோது அவர்களோடு நெருக்கமாகப் பழகி ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கவேண்டிய பங்களிப்பினைப் பெற்றோர்களும் ஒரு வகையில் ஆசிரியர்களும் வழங்கத் தவறுவதனால், மாணவர்கள் வளர்க்கப்படாமல் வளர்ந்துவிடுகின்றனர். அவர்களது வளர்ச்சியில் நல்லனவும் அல்லாதனவும் சேர்ந்தே வளர்ந்துவிடுகின்றன. பல மாணவர்கள் நெருக்கமான அன்பையும் ஆதரவையும் பெறமுடியாமல் துர்நடத்தையுடைய சகாக்களின் சகபாடிகளாகி விடுகின்றனர்.



இந்நிலை மாறவேண்டும். பிள்ளைகளை ஆரம்பத்திலிருந்தே அக்கறை குறையாது பெற்றோர்கள் கவனித்துக் கொள்ளவேண்டும். பாட சாலைகள் அவர்களது தேவையறிந்து அவர்களது வாழ்க்கைக்குத் தேவையான களங்களாக மிளிரவேண்டும் என்றார். (116)

# சின்னம் சூட்டும் நிகழ்வு

(அச்சுவேலி)

ஆவரங்கால் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தில் இவ்வருடம் புதிதாகக் நியமிக்கப்பட்ட மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் திரு.கு.ரவிச்சந்திரன் தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு காலைப்பிரார்த்தனையை தொடர்ந்து இடம்பெறவுள்ள இச்சின்னம்சூட்டும் வைபவத்தின் போது புதிதாக நியமிக்கப்பட்ட பன்னிரண்டு மாணவ முதல்வர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும், சத்தியப்பிரமாண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.(03)

# மின்சார விநியோகத்தை பெற்றுத்தருமாறு தந்தை செல்வாபுர மக்கள் கோரிக்கை

(அளவெட்டி)

தெல்லிப்பளை தந்தை செல்வாபுரம் பகுதியில் மின்கம்பங்கள் நடப்பட்டும் இதுவரை மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டஇப்பிரதேசத்தில் மக்கள் படிப்படியாக தமது வாழவாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் இப்பகுதிக்கு மின்சார விநியோகம் செய்யும் பொருட்டு மின்கம்பங்கள் நடப்பட்டு 6 மாதங்கள் கடநதுள்ள நிலையில், இதுவரை மின்சாரம் வழங்கப்படாமல் இருப்பது கவலையளிப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.மின்சாரம் இல்லாது இப் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் இரவு வேளைகளில் கல்வியை தொடரமுடியாத நிலை காணப்படுவதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளைகளில் இருள் சூழ்ந்து காணப்படும் இப்பகுதிக்கு விரைவில் மின்சார விநியோகத்தை பெற்றுத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென செல்வாபுரம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (93)

## முரசின் இன்றைய பலன்

(16.01.2012 –திங்கட்கிழமை)

கர வருஷம் தை மாதம் 2 ஆம் திகதி. அட்டமி பின் இரவு 1.56 வரை. நட்சத்திரம் சித்திரை பின் இரவு 11.45வரை. சித்தாமிர்தம் அட்டமி-நவமி கரிநாள் இராகுகாலம் 8.04-9.34வரை. சுபநேரம் 12.34 - 2.04வரை. எமகண்டம் 11.04-12.34வரை குளிகைகாலம் 2.04-3.34 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் :- | அனுகூலம் கிடைக்கும், பொருள்சேரும், கல்வியில் மேன்மை, குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| ரிஷபம:- | மனஉளைச்சல், உறவினர் ஆதரவு, போட்டிகளில் வெற்றி, பங்காளர் கெடுபிடி. |
| மிதுனம் :- | புத்திரர்களால் நன்மை, இடமாற்றம் வலிய வரும், அயலவர் உதவி, அவசரம் கூடாது. |
| கடகம் :- | காரியானுகூலம், விட்டுக்கொடுத்து அனுசரித்தல், மருத்துவ செலவு, பதவி உயர்வு. |
| சிம்மம் :- | தற்புகழ்ச்சிகள், தொழில் முனைவோர் உயர் நிலை, தன்னிறைவு, வெற்றிகள் குவியும். |
| கன்னி :- | குழப்பநிலை, நற்பெயர்கிட்டும், சேமிப்பு பெருகும், இல்லறச் சிறப்பு. |
| துலாம் :- | நினைத்தது பலிக்கும், குடும்பசுகம், நிர்ப்பந்தம், கடின உழைப்பு. |
| விருச்சிகம்- | சுபச்செலவுகள், குடும்பச்சிறப்பு, நினைத்த காரியம் வெற்றி, ஆடம்பர விருத்தி. |
| தனுசு:- | ஆரோக்கிய குறைவு, புத்திரர் உதவி, வழங்கில் வெற்றி, குடும்ப இறுக்கம். |
| மகரம:- | முதியோர் ஆசி, சொத்துக்களால் செலவு, நிதானம் அவசியம், வாகன வசதிகள். |
| கும்பம் :- | காரியானுகூலம், பிரயாசை மிகுதி, இலட்சிய வெற்றி, இல்லறச் சிறப்பு. |
| மீனம் :- | நல்ல செய்தி கிட்டும், குடும்ப முன்னேற்றம் மனக்கவலை, மௌனம் நன்று. |


# பாடநூல் கிடைக்காததால் மாணவர்கள் பெரும் அவதி

(அச்சுவேலி)

யாழ். குடாநாட்டு பாடசாலைகளிற்கு புதிய ஆண்டிற்கான இலவசப் பாடநூல்கள் முழுமையாகக் கிடைக்கப்பெறாமையால் பல மாணவர்களுக்கு இதுவரை பல பாடங்களுக்குரிய இலவசப் பாடநூல்கள் வழங்கப்படவில்லை என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2011ஆம் ஆண்டின் இறுதித்தவணை முடிவின் போது புதிய ஆண்டிற்கான பாடநூல்கள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவை மாணவர்களுக்கு வழங்குவதற்கு போதுமானவையாக இல்லாததால், பல வகுப்புக்களைச் சேர்ந்த அனேக மாணவர்களுக்கு குறித்த சில பாடங்களுக்குரிய இலவசப் பாடநூல்கள் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மாணவர்கள் தமது அன்றாட கற்றல் நடவடிக்கைகளுக்காக வேறு மாணவர்களிடமேஅப்புத்தகங்களைஇரவல் வேண்டி கற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (03)




அறுபது, எழுபது, 81ஆம் ஆண்டு ஜூன் மாதம் 02ஆம் திகதி இரவு, அப்போது நடைபெற்ற அபிவிருத்திச்சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ். நாச்சிமார் கோவிலடி மைதானத்தில் நடைபெற்றபோது இரு பொலிஸாரை இனம் தெரியாதவர்கள் சுட்டுக்கொன்றதைத் தொடர்ந்து நடைபெற்ற அனர்த்தங்களில் தீக்கிரை செய்யப்பட்ட யாழ். பொதுசன நூலகக்கேட்போர்கூடம் பல இலக்கிய அமைப்புக்கள் தோன்றவும், வளர்வதற்கும் வித்திட்டது.

இலக்கிய அமைப்புக்களுக்குக் கேட்போர் கூடம் எவ்வித கட்டணமும் அறவிடப்படாமல் இலவசமாக வழங்கப்பட்டு வந்தது.

அதனைப்பயன்படுத்தி யாழ். நகர மற்றும் பிரதேச இலக்கிய அமைப்புக்கள் விடுமுறை தினங்களில் நூல் வெளியீடு, அறிமுக விழாக்கள், இலக்கியக்கருத்தரங்குகளை நடத்தி இலக்கிய ஆர்வலர்களிடையே ஊப்பிவிப்பை வழங்கி வந்தமை மறந்து விடவோ, மறுத்து விடவோ முடியாது.

அன்றும் சரி இன்றும் சரி அப்படியான ஒரு வசதி இலக்கியகாரர்களுக்குக் கிடைப்பது நினைத்துப்பார்க்க முடியாத விசையம் தான்.

இன்றைய இலக்கியகாரர்களுக்கு அது ஒரு இதிகாசம், புராணம் போன்ற சங்கதிகள் என்றால் மிகையில்லை.

இப்பொழுதெல்லாம் இலக்கியக் குழுமங்களை முன்னரைப்போல காணமுடியவில்லை. பல்கலைக்கழக மாணவர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில அமைப்புக்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

வரதரின் மறுமலர்ச்சிக்குழுமத்தை அடுத்து முற்போக்கு அணியைச் சேர்ந்தவர்களின் இலக்கியக்குழுமம், யாழ்.இலக்கிய வட்டம், மக்கள் கலை இலக்கியப்பெருமன்றம், யாழ்.இலக்கிய நண்பர்கள் கழகம் போன்ற அமைப்புக்கள் ஊருவாக்கப்பட்டு தமிழ் இலக்கிய உலகில் மண்வாசனை, பிரதேச மொழி வழக்கென பூத்துக்குலுங்கிய காலமொண்டிருந்தது.

அதற்கெல்லாம் அவர்கள் ஒன்று கூடவும், செயற்படவும் நகரை மையமாகக்கொண்ட பொது இடமான்றும் தேவைப்பட்டது.

அதுவும் இலவசமாகக் கிடைக்கும் போதில் சொல்லவும் வேண்டுமா?

அப்பொழுது யாழ். பொதுசன நூலகக் கேட்போர் கூடம் ஒன்று தான் என்றில்லாமல் நகரின் மத்தியில் செயற்பட்டு வந்த மீட்டல் வகுப்பு நிலையங்களும் உதவி வந்ததைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

அதனால் அக்காலத்தில் அரும்பாகி முளைவிட்ட இளம் இலக்கிய ஆர்வலர்களுக்கு பேருதவியாக அவை விளங்கின.

இன்று யாழ். நகர்ப் பகுதியில் இலக்கியம் சம்பந்தமான நிகழ்வுகளை நடத்துவதற்கு ஆயிரக்கணக்கில் பணம் செலுத்தியே மண்டபங்கள் பெறவேண்டிய நிலை இருக்கின்றது.

யாழ். பொது சன நூலகக் கேட்போர் கூடம் புதிதாகப் புனரமைக் கப்பட்ட பின்னால் இலவசமாக வழங்கும் திட்டங்கள் நிறுத்தப்பட் டுள்ளது.

மந்த கதியில் தூங்கிக் கொண்டிருக்கும் எமது இளம் தலைமுறை இலக்கியக்காரர்களை கட்டி எழுப்பி ஊக்குவிக்க இலவசமாகக் கிடைக்கும் பொது மண்டபங்கள் உருவாகுமா?

பொதுசன நூலக செயற்பாட்டை நிர்வகிக்கும் யாழ். மாநகரசபை கேட்போர் கூடத்தை எண்பதுகளுக்கு முன்னரைப் போன்று இல்வசமாக வழங்கி இலக்கிய வளர்ச்சியில் கைகொடுக்குமா?

# கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய ஆதரவற்ற சிறார்கள்

வன்னியில் நடந்த போர் அங்கே, ஆதரவற்றோரையும் உதவி தேவைப்படுவோரையும் பெருக்கியுள்ளது. ஆனால், இந்தத் தேவைகளுக்கான உதவிகளைச் செய்வோரை அது பெருக்கியுள்ளதா என்றால், சற்று வருத்தத்துடன்தான் இதற்கான பதிலைச் சொல்ல வேண்டியுள்ளது.

உதவிகளும் ஆதரவும் தேவைப்படும் அளவுக்கு அவற்றைச் செய்வோரின் தொகை குறைவு. ஆதரவு தேவைப்படுவோருக்கு உதவுவதே சிறந்த பணி. தொண்டிற் சிறந்தது, தேவைப்படுவோருக்குத் தேவைப்படும் காலத்தில் செய்யும் பணியே! எனவேதான் "காலத்திற் செய்யும் பணி, ஞாலத்திற் சிறந்தது" என்று சொல்வார்கள். இடமறிந்து, நிலையறிந்து செய்யும் உதவியே பேருதவியாகும்.



போர் எப்போதும் வேர்களை அறுத்தெறியும். சிதைவுகளையும் அழிவுகளையும் ஏற்படுத்தும். முதலாம், இரண்டாம் உலகப்போர்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் அந்தப் போர் நடந்த நாடுகளில் மிக உச்ச நிலையில் இருந்தன. மனித வரலாறு கண்டிராத அளவுக்கிருந்த அந்தத் தாக்கங்களினால், லட்சக்கணக்கான சனங்கள மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். இவற்றை எப்படி நிவர்த்தி செய்வது என்றே தெரியாத நிலையில் திணறின அரசுகள். குறிப்பாகப் போரில் ஈடுபட்ட அரசுகள்.

மேலும் சமூக ஆர்வலர்களுக்கும் இந்த நிலை ஒரு சவாலாகவே இருந்தது.

இந்த நிலையானது மனித குலத்துக்கே பெரும் சவாலை ஏற்படுத்தியது. பாதிக்கப்பட்டோரை அந்தப் பாதிப்புகளிலிருந்து மீட்டெடுப்பதற்காகச் சிந்திக்கவும் செயற்படவும் வேண்டிய அவசியமேற்பட்டது மனித குலத்திற்கு. இதன் விளைவுகளாகவே, பல்வேறுபட்ட தொண்டு அமைப்புகள் தோற்றம் பெற்றன.

மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்காக அன்று தோற்றம் பெற்ற அமைப்புகளே, இன்று உலகெங்கும் மனித நேயப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. இலங்கையல் போர் நடந்த வேளையிலும் இப்போதும் தொண்டாற்றிக் கொண்டிருப்பவையும் இந்த அமைப்புகள்தான்.

("வெள்ளைக்காரன் - அந்நியநாட்டுக்காரன் எல்லாம் உதவுகிறான், ஆனால், எங்கட சொந்த உறவுகள் மட்டும் ஏதேதோ காரணங்களைச் சொல்லிக் காலத்தைக் கடத்தித் தங்களின் கைகளை இறுகப் பொத்திப் பிடிக்கின்றன. மனம விரியாததே இதுக்கெல்லாம் காரணம். விடுதலையை உண்மையாக இவர்கள் விரும்பியிருந்தால், இவர்களிடம் நிச்சயமாக மனவிரிவு ஏற்பட்டிருக்கும். பாசாங்கு செய்பவர்களிடம் எப்படி மனவிரிவு ஏற்படும்?" என்று கேட்கின்றார் வன்னியில் ஒரு முதியவர்.)

அனர்த்தமோ இடரோ எந்த வகையில் வந்தாலும் அவற்றாற் பாதிக்கப்படும் சனங்களைப் பராமரிப்பது, பாதுகாக்க முற்படுவது, ஆதரிப்பது, இத்தகைய பணிகளினூடாக பாதிக்கப்பட்டோரின் உளநிலையைச் சீராக்கி அவரகளை இயல்பு வாழ்வில் மேம்பட வைப்பதே இந்தத் தொண்டு அமைப்புகளின் பணியாகும்.

இத்தகைய பணியை எந்தச் சமூகம் முன்னின்று செய்ய முனைகின்றதோ அதுவே பண்பாட்டிற் சிறந்த சமூகமாகும். மனிதாபிமானமும் மனித நேயமுமே சிறந்த ஒரு பண்பாட்டின் அடிப்படைகளாகும். இவை வரண்டநிலையில இருக்கும் எந்தச் சமூகமும் தனது பண்பாட்டை இழந்ததாகவே மாறும். இதற்குப் பிறகு, அந்தச் சமூகம் பண்பாட்டுப் பெருமைகளைப் பேசுவதால் பயனே இல்லை.

ஆனால், போரை உச்சநிலையில் நடத்தி, அதை ஆதரித்த ஈழத்தமிழ்ச் சமூகமும் இலங்கை அரசும் போரினாற் பாதிக்கப்பட்ட சனங்களைப் பராமரிக்கும் விதம் மிகக் கவலைக்கும் கண்டனத்துக்கும் உரியதாகவே இருக்கிறது. அதிலும் போரினால் அநா தரவாக்கப்பட்ட மக்களின் நிலையைப் பற்றிய கரிசனை இந்தத் தரப்புகளுக்குப் போதாது என்றே கூற வேண்டும். (பண்பாட்டிலும் வரலாற்றிலும் தாம் சிறந்த சமூகத்தினர் என்று இவர்கள் கூறிக்கொண்டிருப்பது எதன் அடிப்படையில்?).

பிரதானப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய இந்தப் பணி பாராமுகமாக்கப்பட்டுள்ளது. அல்லது சில சில்லறைத் தரப்பினர் இந்தப் பாதிப்புகளையும் பாதிக்கப்பட்டோரை யும் வைத்து அரசியல் நடத்துகிறார்கள். அல்லது வியா பாரம் செய்கின்றனர். இவர்களிற் பெரும்பாலானோர் புலம்பெயர் நாடுகளில் இருக்கும் அரசியற் செயற்பாட் டாளர்களும் சில இணையத்தளத்தினருமே!

இதனால், பாதிக்கப்பட்டோர் மனிதாபிமான எல்லைகளுக்கு அப்பால், நீதிக்கும் தர்மத்துக்கும் அப்பால், மிக மோசமான முறையில் விற்பனைப் பண்டங்களாகவும் காட்சிப் பொருட்களாகவும் மாற்றப்பட்டுள்ளனர். இத்தகையதோர் அவலப் பின்னணியில், இந்த அவல நிலைக்கு மாறாகவும் இந்த அவலப்பரப்பிலிருந்து பாதிக்கபட்டோரை மீட்டுப் பராமரிப்பதாகவும் சில காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அத்தி பூத்தாற்போல என்பார்களே, அதைப்போல அருமையாகச் சில காரியஙகள்.

குறிப்பாக யாழ்ப்பாணத்திலுள்ள சில முக்கியமான முன்னணிப் பாடசாலைகள், பாதிப்புக்குள்ளான சிறார்களை, போருக்குப் பின்னரான சூழலில் பொறுப்பேற்று அவர்களுடைய கல்வியை வழங்கி வருகின்றன. சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி போன்ற இதில் முன்னுதாரணமானவை.

இதைப்போல அங்குள்ள சில சிறார் இல்லங்களும் குறிப்பிட்ட தொகையிலான ஆதரவற்ற சிறுவர்களைப் பொறுப்பேற்று அவர்களுடைய எதிர்காலத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. ஆனால், இந்தத் தொகை மிகக் குறைவானவே. பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கும் - உதவி தேவைப்படுவோரின் தொகையுடன் ஒப்பிடும்போது இவ்வாறு பொறுப்பெடுக்கப்பட்டோரின் அளவு மிகமிகக் குறைவே.

வன்னியில் - கிளிநொச்சி மாவட்டத்தில் "மகா தேவ ஆச்சிரமம்" மற்றும் "குருகுலம்" போன்றவற்றில் சுமார் முன்னூறுக்கும் அதிகமான பிள்ளைகள் பராமரிக்கப்படுகிறார்கள். இந்த இல்லங்களில் ஆண்களும் பெண்களும் தனித்தனியாகவே பராமரிக்கப்படுகின்றனர். இந்த இல்லங்களுக்கான உதவிகளைப் பலர் முன்வந்து செய்வது குறிபபிடத்தக்கது.

தவிர, முல்லைத்தீவு மாவட்டத்தில் - முத்தையன் கட்டில் இயங்கும் அன்பு இல்லத்தில் (புனித பூமி இல்லத்தில்) சுமார் அறுபது வரையான சிறார்கள் பொறுப்பேற்கப்பட்டுப் பராமரிக்கப்படுகிறார்கள். இந்தத் தொகை வரவர அதிகரித்து வருவதாக அங்குள்ள நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த இல்லத்துக்கான செலவீனங்களைப் பெருமளவிலும் புலம்பெயர் நாடுகளிலுள்ள உதவும் மனப்பாங்குடையோரே செய்து வருகின்றனர். இவர்கள் எந்த வகையான அரசியலையும் விட பாதிக்கப்பட்ட மக்களுக்கு அநாதரவான சிறார்களுக்கு உதவுவதையே தங்களுடைய பிரதான அக்கறையாகக் கொண்டிருக்கின்றனர். சிலர் நேரிலேயே இந்த இல்லத்துக்கு வந்து நிலைமையைப் பார்த்து தங்களின் பங்களிப்பு எல்லையை விரிவாக்கம் செய்கின்றனர். அத்துடன், நிலைமையை நேரிற் பார்த்துச் செல்வதால், இவர்கள் ,இன்னும் பலரையும் இந்த இல்லத்துக்கான பங்களிப்பாளர்களாகவும் ஆக்குகின்றனர்.

முதலில் சொந்த உறவுகளுக்கு உதவுவோம். அவர்களைப் பராமரிப்போம். சிதைவு நிலையில் உள்ள சமூகத்தை நிலைப்படுத்துவோம். மீள் நிலைப்படுத்தப்படும் ஒரு சமூகத்தினாலேயே அதனுடைய எதிர்காலத்தைப் பாதுகாக்க முடியும். இதற்கு ஆதரவும் வழிகாட்டலும் தேவை. முக்கியமாக உணவும் கல்வியும் அவசியமானவை. இதைச் செய்வோம். இதற்கு உதவுவோம்" என்பதாக இருக்கிறது இவர்களுடைய நோக்கமும் சிந்தனையும் அபிப்பிராயமும்.

இந்த அடிப்படையில் உதவிகள் கிட்டினால், இளைய தலைமுறையை நல்லமுறையில் சிதைவின்றி ஆற்றுப்படுத்தி வளர்த்தெடுக்க முடியும் என்று சொல்கிறார் அன்பு இல்லத்தின் நிர்வாகி.

*- கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன் கட்டுரையிலிருந்து...*

# ஸ்ரீதேவியுடன் ஒரு மாலைப்பொழுது

அப்போது தென்னிந்தியாவைச் சேர்ந்த ஹேமமாலினி, ரேகா மற்றும் ஸ்ரீதேவியே பாலிவுட்டைக் கலக்கிக் கொண்டிருந்தார்கள் மும்பை அப்போது பம்பாயாக இருந்தது. அதன் புகழ்மிக்க மெஹ்பூப் ஸ்டுடியோவில் மாலை 4 மணிக்கு ஹூட்டிங்கின் இடையில் ஸ்ரீதேவியை பேட்டி காணலாம் என்று சொன்னார்கள்.

நான் அங்கு போய் சேர்ந்தபோது ஸ்ரீதேவி ஒப்பனையில் இருப்பதாகவும் நான் அவரது அறைக்கு வர்லாம் என்றும் சொன்னார்கள். ஸ்ரீதேவி என்னை வெகு மரியாதையுடன், உள்ளே வந்து அமரச் சொன்னார். அவர் அவ்வளவு அழகாக உயரமாக ஸ்லிம்மாக இருப்பார் என்று நான் நினைத்திருக்கவில்லை. ஸ்மார்ட்டாக இருப்பார் என்றும் நினைக்காதது எனது தவறு. பொம்மை மாதிரி இருப்பார் அதிகம் பேசமாட்டார் என்று எங்கோ படித்திருந்தேன்.

அவரது தம்பியோ அல்லது வேறு நெருங்கிய உறவினரோ, ஒரு இளைஞன அவர் தெலுங்கில் சரமாரியாக தொடுதத பணிகளுக்கும் கட்டளைகளுக்கும் மெல்லிய ஆமோதிக்கும் குரலில் பதில் சொன்னான். ஸ்ரீதேவியின் குரல் மென்மையாக ஆனால் கண்டிப்பாக இருந்தது. மிக நல்ல மனேஜர் போல் ஒரே சமயத்தில் பல விஷயங்களில் அவர் கவனம் செலுத்தியபடி இடையில் என்னுடைய கேள்விகளுக்கும் பதில் சொல்லிக்கொண்டிருந்தார்.

சாதாரணமாக நடிகை என்றால் அவருககு உதவியாக அவருடைய அம்மாவோ அக்காவோ அல்லது வேறு ஒரு முதியமாதோ துணையாக இருப்பார்கள் என்று நினைத்திருந்தேன். ஸ்ரீதேவிக்கு துணை யாரும் தேவைப்படவில்லை என்று தோன்றிற்று. அவர் ஒரு ராணியைப் போல கம்பீரமாகத் தோற்றமளித்தார். ஹீர் ராஞ்சா காதல் பட சூட்டிங்கிற்காக அவர் அணிந்திருந்த உடையினால் எனக்கு அப்படித் தோன்றிற்றோ என்னவோ. ஆனால் அவர் பரபர வென்று சூட்டிங்கிற்குத் தாயாராகும் விதத்தில் ஒரு ப்ரொபஷனலின் நேர்த்தியான திறமை இருந்தது.

கீழ் தளத்தில் சூட்டிங்கிற்குக் கூப்பிட ஆள் வந்ததும் "ரெடி" என்று புன்னகைத்து விநாடிபிசகாமல் கிளம்பி என்னைப் பார்த்து, "நீங்களும் வாருங்கள். இடையில் ப்ரேக்கின் போது பேட்டியைத் தொடரலாம்" என்றார். அவர் கீழே செலலும் வழியில் நிறைய பேர் அவரைப் பார்க்கக் காத்திருந்தார்கள். சூட்டிங் ஆரம்பித்தது. கப்சிப்பென்று அமைதி அமர்ந்தது.

சற்று முன் வரை சிரித்துப் பேசிக் கொண்டிருந்த ஸ்ரீதேவியின் முகம் கமெராவின் முன் அசாதாரண மாற்றம் கண்டது. சோகம், துக்கம், உதடு துடிக்க இரண்டு வரி டயலாக். குபுக்கென்று கண்களில் நீர் வந்தது. நான் திகைத்துப் போனேன். அது எப்படி சாத்தியம்? நான் அவரைப்பற்றி சினிமா நிருபர்கள் எழுதியதைப் படித்திருக்கிறேன்.



பொம்மைபோல இருக்கும் ஸ்ரீதேவி கமெராவின்முன் நம்பமுடியாதபடிக்கு உயிர் பெறுவதை எல்லோரும் குறிப்பிடுவது மிகையானது என்று நினைத்திருந்தேன். ஆனால் அது வார்த்தை பிசகாத உண்மை என்று நேரில் கண்டேன். கட் கட் என்று ஷாட் முடிந்து இடைவெளிககுப் பிறகும் மீண்டும் மீண்டும் அவரால் அந்த சோகத்துக்கும் கண்ணீருக்கும் தாவ முடிந்தது. அது கொஞ்சமும் செயற்கையாக இருக்கவில்லை. க்ளிஸரின் கூட அவர் உபயோகிக்கவில்லை. பிறகு எதுவுமே நடக்காததுபோல் என்னுடன் வந்து அமர்ந்து சிரித்துப்பேச முடிந்தது.

என்னால் நம்பமுடியவில்லை. அது எப்படி சாத்தியம், உணர்வு ரீதியாக பாதிககாதா என்று கேட்டேன். "எதற்கு பாதிக்க வேண்டும், நடிப்பது எனது தொழில்" என்றார் சாதாரணமாக. நான் நடிகை சாவித்திரியைப் பற்றி குறிப்பிட்டேன். பாசமலர் கடைசி சீன் சூட்டிங் முடிந்த பிறகு ஒரு வாரத்திற்கு மேல் அவர உணர்வு ரீதியாக பாதிக்கப்பட்டுப் படுத்திருந்ததாக ஒரு பேட்டியில் கூறியிருந்தார்.


"சாவித்ரி அம்மா மிகப் பெரிய நடிகை. எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. ஆனால் நடிப்பும் மற்ற தொழில் போலத்தான்னு நாம எடுத்துக்கல்லேன்னா ரொம்ப கஷ்டப் படுவோம் என்று நான் நினைக்கிறேன். ஒரே சமயத்திலே இரண்டு மூணு படம் சூட்டிங் செய்யவேண்டியிருக்கும். எல்லா பாத்திரங்களுடைய உணர்வுச் சுமைகளையும் நாம துாக்கிக்கிட்டுபடுக்கப் போனோம்னா நிம்மதியே போயிடும். இங்கிருந்து கிளம்பின உடனே நான் இந்த சூட்டிங்கைப் பத்தி மறந்துடுவேன்.!

தமிழ் சரளமாக வந்தாலும் ஆங்கிலத்தல் பேசுவது இன்னும் சரளம் என்று ஆங்கிலத்தில் பேசினார். சூட்டிங் யூனிட்டில் இருந்தவர்கள் சற்று எட்டி நின்று மிக மரியாதையுடனேயே அவரை நடத்தியதை கவனித்தேன். அவரது சுய நம்பிக்கையும் நிர்வாகத் திறமையுமே வட இந்தியாவில் அவரைக் கொடிகட்டிப் பறக்க வைத்ததாகத் தோன்றிற்று.

அகில இந்தியப் புகழ் கிடைக்கும் என்று என்றாவது நினைத்திருந்தாரா? "இல்லை" என்று அழகாகப் புன்னகைத்தார். "ஆனா அது சுலபமாகக் கிடைக்கவில்லை. நிறைய உழைக்கணும். இருந்தும் இந்தப் புகழ் எல்லாமே சொற்ப காலத்துக்குதான்னும் நினைவிருக்கு. Enjoy while the going is good!" அந்த அழகிய தலைக்குள் விவேகமும் குடிகொண்டிருந்தது.

*- வாஸந்தி*

## வண்டிக் காளை



**மு**ன்னங் காலிரண்டிலும்
லாடங் கழண்டு கப்பி குத்தி
ரத்தக் கசிவினால்
எடுத்தடி வைக்க இயலவில்லையென
சொல்ல வேண்டும் அவனிடம்.

ஒரு உரிக்காத பெரிய தேங்காயைப் போல்
உப்பியிருக்கும் கழுத்திலிருந்து
காக்கைகள் புழுவெடுப்பதைக்
காட்ட வேண்டும் அவனிடம்.

தார் பாய்ச்சிய ரணங்களில்
எளிதில் ஈ அமர்ந்து
உயிர் குடிப்பதை
உரைக்க வேண்டும் அவனிடம்.

சேறாய் நொந்து போயிருக்கும்
மூக்கில் வலி பெருக்கும்
நைலோன் கயிற்றை நீக்கும்படி
வேண்டிக்கொள்ள வேண்டும் அவனிடம்.

எப்போதோ இழுக்க முடியாமல் திணறியபோது
ஈ விரட்ட முடியாத வகையில்
முறுக்கி . ஒடிக்கப்பட்ட வாலை
அவனிடம் காட்டினால் தேவலை.

என
அசை போட்டுக் கொண்டு படுத்துக் கிடந்தது!
துண்டையுதறித் தோளில் போட்டுக் கொண்டு
முறுவலுடன் வந்துகொண்டிருக்கும் அவனைக்
கொலைக்களத்திற்குச் செல்லக் காத்திருக்கும்
கைதியாய்
பார்த்துக் கொண்டிருக்கும்
எதுவும் பேசாமல்.

*- இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்*

# இந்தத் "தேசியம்" போதுமா?

**தே**சம், சுயநிர்ணயம் என்பவறறை கொள்கையாக வரித்துக் கொணடவரகளினால் மாகாணசபை முறையினை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த இரண்டு எண்ணக் கருக்களும் தமிழ் மக்களின் கூட்டிருப்பையும் கூட்டுரிமையையும் பிரதிபலிப்பவை.

வடக்கு-கிழக்கு பிரிக்கப்பட்ட பின் தமிழ் மக்களின் கூட் டிருப்பு மாகாணசபை முறையில் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. மாகாணசபைகள் எந்தவித சுயாதீனமும் இல்லாமல் மத்திய அரசில் தங்கியிருப்பதனால் தமிழ் மக்களின் கூட்டு இறைமை இம்முறையில் இல்லாமல் செய்யப்பட் டுள்ளது. இதனால் மாகாணசபை முறைமையை ஏற்பவர்கள் தேசம், சுயநிர்ணயம் என்பவற்றை நிராகரிப்பவர்கள் என்றே கூறவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரனும் சிறீதரனும தேசம், சுயநிர்ணயம் என்பவற்றை தாம் ஆதரிப்பதாக பகிரங்கமாக கூறிவருகின்றனர். ஆனால் தேர்தல் பகிஸ்கரிப்பை நிராகரிப்பதாகக் கூறுகின்றனர். இது அவர்களின் இரட்டை வேடத்தையே காட்டுகின்றது. மக்கள் மத்தியில் தேசம், சுயநிர்ணயம் எனக் கர்ச்சிப்பதும் நடைமுறையில் அதனை நிராகரிப்பதும் முழுமையான இரட்டைவேடம்தான்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை இரடடை வேடம் போடும் என்றால் அதன் ஏனைய உறுப்பினர்களும் இரட்டைவேடம் போடுவது தவிர்க்க முடியாதது.

மாகாணசபைமுறை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அரசு தனது பேரினவாத ஆக்கிரமிப்பை மேற்கொள்ளத்தான் போகின்றது. இந்த ஆக்கிரமிப்புகளை மாகாணசபை முறையினால் ஒருபோதும் தடுக்க முடியாது.

மக்களை இணைத்த தொடர்ச்சியான போராட்டங்கள் மூலமாகவும் தமிழ்த்தேசிய அரசியலை தொடர்ச்சியாகத் தக்கவைப்பதன் மூலமாகவும் அதனை சர்வதேச மயப்படுத்துவதன் மூலமாகவும் தான் த்டுககமுடியும். ஒரு பீயோனை நியமிக்கின்ற அதிகாரம கூட் தமக்கு இல்லை என பிள்ளையான் ஓலமிடு கின்றார்.

இந்நிலையில் இந்த முதலமைச்சர் பதவியை வைத்துக்கொண்டு கூட்டமைப்பினால் என்னதான் சாதிக்கமுடியும்.

வட மாகாணசபையினால் நடைபெற்று வரும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்க முடியும் என சுரேஸ் பிரேமச்சந்திரன் மக்களுக்கு ரீல் விடுகின்றார். மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் கிடையாது. 13 ஆவது திருத்தம் அதனைத் தெளிவாக கூறுகின்றது. அரச காணிகள் மத்தியரசிற்குரியது என்றே அங்கு கூறப்பட்டுள்ளது.

இதைவிட ஜனாதிபதி காணி அதிகாரம் மாகாணங் களுக்கு வழங்கப்படமாட்டாது எனத் திட்டவட்டமாக சர்வதேசத்திற்கு கூறியுள்ளார். இதன் பின்னரும் யாரை ஏமாற்றுவதற்காக சுரேஸ் பிரேமச்சந்திரன் இவ்வாறான அறிக்கைகளை விடுக்கின்றார்.

சிங்களக் குடியேற்றங்களை சரியான தகவல்களுடன் ஆவண ரீதியாக வெளிப் படுததி மக்களை இணைத்து போராடுவதன் மூலம் தடுக்கமுடியுமே தவிர மாகாணசபைகளினால் தடுக்க முடியாது. ஆனால் மிகப் பெரிய துரதிஸ்டம் இவ்வாறான வலுவான ஆவணத் தொகுப்புக்கள் எதுவும் கூட்டமைப்பிடம் கிடையாது. அதனைத் தயாரிப்பதற்கான முயற்சிகளிலும் அது ஈடுபடுவ தில்லை. இத்தனைக்கும் ஆய்வு உதவியாளர் ஒருவரை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வைத்திருப்பதற்கும் அரசு வசதிகள் செய்துகொடுத்துள்ளது.

அரசியல் தீர்விற்கு அடிப்படையாக உள்ள காணி அதிகாரம், பொலீஸ் அதிகாரம், வட-கிழக்கு இணைப்பு என்பன தரப்பட மாட்டாது என ஜனாதிபதி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ள நிலையில் பேச்சுவார்த்தையை தொடர்வதில் என்ன பயன் என்ற கேள்வி எழுகின்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் இதற்கெல்லாம் விடைகள் இல்லை.

பேச்சுவார்த்தையில் விலகினால் சுயநிர்ணய உரிமைப் பாதைக்கு ஒசெல்லவேண்டும். அதற்கான போராட்டங்களை நடாத்த வேண்டும். அதற்கெல்லாம் கூட்டமைப்பு தயாராக இல்லை. கூட்டமைப்பின் எஜமானான இந்தியாவும் அதனை அனுமதிக்காது. இதனால் அரசாங்கம் கூட்டமைப்பினைத் தள்ளி உதைத்தாலும் அது அரசாங்கத்தின் காலைக் கட்டிப்பிடித்துக் கொண்டே இருக்கப்போகிறது.

கூட்டமைப்பிற்கு தற்போதுள்ள கவலையெல்லாம் அதனுடைய சரணடைவுச் செயற்பாடுகளுக்கு தமிழ் சிவில் சமூகம் தடையாக இருக்கப் போகின்றது என்பதுதான். தெரிவுக்குழுவிற்கு பெயர் கொடுப்பதை சற்றுத் தள்ளிப் போட்டதற்கும், சிறைச் சாலைகளுக்கு திடீரென விஜயம் செய்வதற்கும், போர் முடிவடைந்து இரண்டு வருடங்களின் பின்னர் காணாமல் போனோர் தொடர்பான விபரங்களைச் சேகரிக்க முற்படுவதற்கும் சிவில் சமூகத்தின் அறிக்கையே காரணம்.

இந்தியாவினதும் மேற்குலகத்தினதும் வற்புறுத்தலினால் அதிகாரப்பகிர்வுப் பாதையை தலையில் சுமந்து கொண்டு சென்ற கூட்டமைப்பு இன்று மேலும செல்ல முடியாமல் நடுத்தெருவில் நின்று ஓலமிடுகிறது.

மேற்குலகத்தின் பிரதான இலக்கு ஆட்சி மாற்றம் தான். அதற்கு பயன்படக்கூடிய கருவியாக இனப்பிரச்சினை இருப்பதனால் அதனைக் கையிலெடுத்துள்ளது. அந்த புதிய ஆட்சிக்கு நெருக்கடிகள் வரக் கூடாது என்பதற்காக 13 ஆவது திருத்தத்துடன் அரசியல் தீர்வை மட்டுப்படுத்த விரும்புகின்றது. அதாவது இறுகிப்போன சிங்கள அரச அதிகார கட்டமைப்பிற்கு அதிக சேதாரம் வராமல் இனவிவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகின்றது.

இதனால்தான் தேசம், சுயநிர்ணயம் என்பவற்றை முன்னிலைப்படுத்தாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் தலைமைச் சக்தியாக இருப்பதை ஆதரிக்கின்றது.

ஆனால் இந்தியாவிற்கு இருதலைக் கொள்ளி நிலை. ஆட்சி மாற்றம் இலங்கையில் மேற்குலகத்தின் ஆதிக்கத்தை அதிகம் கொண்டுவந்துவிடும் என்பதனால் அதனையும் விரும்பவில்லை. மறுபக்கத்தில் தனது பிடியிலிருந்து தொடர்ச்சியாக நழுவிச் செல்லும் மகிந்தரையும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியவில்லை.

மேற்குலகம் விரும்புகின்ற ஆட்சி மாற்றத்திற்குகூட இலங்கை அரசியலில் ஒரு அதிகாரச் சமநிலை உருவாகவேண்டும். தமிழ் அரசியலை வலுப்படுத்தினால் ஒழிய இந்த அதிகாரச் சமநிலை ஒருபோதும் உருவாகப் போவதில்லை.

இந்தியாவும் மேற்குலகமும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப்பாதையை ஏற்றுக்கொள்வதற்கு அதிக நாட்கள் இருக்காது என்றே நினைக்கின்றேன்.

*- முத்துக்குமார் கட்டுரையிலிருந்து*

## பிழையின்றித் தமிழ் எழுதுவோம்-7

பிழைதிருத்தம் - பிழைத்திருத்தம்

முன்பெல்லாம் அச்சேறிவந்த நூல்கள் பெரும்பாலும் பிழைகளே இல்லாத பதப்புகளாக வந்தன. அதன்பிறகு வரும் பல நூல்களின் இறுதிப் பக்கங்களில் வரிசை வரிசையாக அச்சுப்பிழைக்கான திருத்தங்கள் இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

முதல் வரிசையில் பிழையான சொற்கள், அடுத்த வரிசையில் திருத்தமான சொற கள் என அமைந்த பக்கத்தின் தலைப்பு "பிழைதிருத்தம்" என்றும் "பிழைத்திருத் தம்" என்றும் இருவகையாக அச்சிடப்படுவதைக் காணமுடிகிறது.

இதில் எது சரி? பிழையைத் திருத்தும் பக்கத்தின் தலைப்பிலேயே பிழை. இதைக் கொடுமை என்று சொல்வது கடுமையான சொல்லன்று.

பிழை + திருத்தம் = பிழைதிருத்தம். பிழை என்பது தவறு. குற்றம், தப்பிப் பிழைப்பது என்றெல்லாம் பொருள்தரும். அப்பொருள்களில் நாம் இங்கே தவறு என்பதைமட்டும் எடுத்துக்கொள்வோம்.

திருத்தம் என்றால் ஒழுங்கு, 'மாற்றம், திட்டம், பிழை திருத்துகை என்றெல்லாம் பொருள்படும். இங்கே திருத்துகையை மட்டும் அதாவது பிழை திருத்துகையை மட்டும் கொள்வோம்.

நூலில் ஏற்பட்ட எழுத்துப்பிழை, சொற்பிழை போன்ற அனைத்துப் பிழைகளுக்குமான திருத்தம் போடுவோர் அதைப் "பிழைத்திருத்தம்" என்று எழுதக்கூடாது. அப்படிப் போட்டால் செய்த திருத்தமும் பிழையென்றாகும்.

*பிழையைத் திருத்துவது பிழைதிருத்தம்.*
*பிழைதிருத்தம் = பிழைக்குத் திருத்தம்.*
*பிழைத்திருத்தம் = பிழையாகிய திருத்தம்.*




## எது பண்பாடு...? எது கலாசாரம்...?

செய்திகளில் குறிப்பாக இணையத்தளங்களில் வரும் செய்திகளில் நாடு முழுவதிலுமிருந்து வாரத்துக்கு ஒரு செய்தியாவது குழந்தையைக் கொன்று புதைத்த செய்தியோ அல்லது வைத்தியசாலையில் விட்டு விட்டுச் சென்ற செய்தியோ இடத்தைப் பிடிக்கின்றன.

செய்தித்தாள்களும் இவற்றைப் பிரசுரித்து மக்களுக்குள் விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. பொலிஸாரும் குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பாக தீவிர விசாரணை செய்து குற்றமிழைத்தவர்களைக் கைது செய்கின்றது. ஆனாலும் நேற்று ஒரு தாய் தன் குழந்தையை வீசிச் சென்றால் நாளை வேறு ஒரு தாய் வேறு ஒரு இடத்தில் குழந்தையை வீசிச் செல்கின்றார்.

அடிப்படையில் குறிப்பிட்ட பிரச்சினையின் மூலகாரணம் என்ன என்பதை எவரும் ஆராயவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. பிரச்சினைக்குரிய சரியான காரணத்தைக் கண்டறிந்தால் தீர்ப்பது சுலபம்.

படித்தவர்கள் பொருளாதார வசதி உள்ளவர்கள், நல்ல பண்புகளுடன் இருக்கும் குடும்பத்தில் உள்ள பெண்கள் எவருமே தன்னுடைய வயிற்றில் பிறந்த குழந்தையைக் கொன்று புதைக்கவோ அல்லது பற்றையினுள் வீசிச் செல்லவோ முடிவு எடுக்கமாட்டார்கள். இவ்வாறான முடிவுகள் எடுப்பவர்கள் மிகக் குறைந்த வீதமுள்ள ஒரு சிலரே. அவர்களை இனம் கண்டு வழிப்படுத்த அல்லது அவர்களை வளமுள்ளவர்களாக மாற்றுவது ஒரு வழி.

மிக மிக முக்கியமான அடுத்த வழி அவ்வாறான மக்கள் வகுப்பினர் இல்லாத வகையில் சமூகங்களை வளப்படுத்த வேண்டும். இவற்றை வாசிக்கும் ஒருவர் என்ன முட்டாள்தனமான கதை. மேலே சொல்லப்பட்டவை எல்லாம் நாட்டில் நடக்குது தானே என்று சொல்லலாம். நடப்பது உண்மையாக இருந்தாலும் உரிய இடங்களைச் சென்றடையவில்லை என்பதே உண்மையான விடயம். யாழ். குடாநாட்டினை எடுத்துக்கொண்டால் இன்றைய திகதியில் கூட பின்தங்கிய பிரதேசமாக பல உள்ளன. அவர்களையும் அவர்கள் சார்ந்த பிரதேசங்களையும் வளப்படுத்தாது நாட்டில் அபிவிருத்தியைப் பற்றி கதைத்துப் பிரயோசனம் இல்லை.

யாழ். குடாநாட்டில் உயர் வகுப்பினராக தம்மைக் காட்டிக்கொண்டவர்கள் எல்லோரும் இவை எல்லாவற்றையும் பற்றி இன்று வரை சிந்திக்காத கீழ் வகுப்பினரே. தான் பிறந்த ஊரில், தான் வளர்ந்த ஊரில் தன் கண்ணுக்கு முன்னாலேயே மனிதர்களில் ஒரு பகுதியினர் கல்வி, பொருளாதாரம், பண்பாடு எனப் பல நிலைகளிலும் பின்தங்கிய நிலையில் உள்ளபோது பண்பாட்டை, கலாசாரத்தைக் காப்பாற்றுவதாக கூறிக்கொண்டு செய்பவை எல்லாமே பண்பாடற்ற செயற்பாடு என்பதில் மாற்றுக் கருத்துக்கிடமிருக்காது.

பிச்சைக்காரனின் காலில் உள்ள புண்போல இன்னும் சமூகத்தில் பிரச்சினைகளை வைத்துக்கொண்டு தமிழர்களுக்கான அரசியல் தீர்வுகளைப் பற்றிப் பேசும் அரசியலையும் அதனைச் செய்பவர்களையும் என்னவென்று சொல்வது? - *குரு*

# ஒசாமாவை அமெரிக்கா கொலை செய்தமை சரியென்றால் பிரபாகரனை நாம் வெற்றிகொண்டது தவறானது அல்ல

(கொழும்பு)



புலம்பெயர் புலிகளின் சவால்களை எதிர்நோக்கத் தயார் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்த புலம்பெயர் புலிகள் முயற்சிப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலாக திகழ்ந்த ஒசாமா பின்லேடனை கொலை செய்ய வேண்டுமென அந்த நாடு கருதியது. அதேபோன்று இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக திகழ்ந்த பிரபாகரன் உள்ளிட்ட புலி உறுப்பினர்களை முறியடித்தமை தவறாகாது என அவர் தெரிவித்தார்.

ஆசிய பிராந்திய வலயத்தின் சிறிய நாடு என்ற காரணத்தினால் இவ்வாறு இலங்கை மீது குற்றம் சுமத்தப்படுகின்றது.

நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதற்கு பல்வேறு சக்திகள் முயற்சித்து வருகின்றன. தற்போது பல்கலைக்கழக மாணவர்களையும் இந்த முயற்சியில் இணைத்துக் கொண்டுள்ளார்கள்.

மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து அவற்றுக்கு தீர்வு வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அரசாங்கத்தை மாற்றுவதற்கு தேர்தல்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர, போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்களின் மூலம் அரசாங்கத்தை மாற்றியமைக்க முடியாது என கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## கிராம அலுவலகம் தீயிட்டு எரிப்பு

(கொழும்பு)

புத்தளம் - மனத்தீவு கிராம சேவையாளர் அலுவலகத்தின் சொத்துக்கள் இனந்தெரியாத சிலரால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

குறித்த சொத்துக்களுக்கு நேற்றுமுன்தினம் இரவு இவ்வாறு தீ வைக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் குறிப்பிட்டனர். கிராம சேவையாளர் அலுவலகத்தின் கதவை உடைத்துக் கொண்டு உள்நுழைந்த இனந்தெரியாத குழு, அதனுள் இருந்த ஆவணங்களை தீ வைத்து எரித்துள்ளது.

கிராம அலுவலருடன் ஏற்பட்ட மனக்கசப்பால் அவருக்கு எதிரானவர்கள் இவ்வாறு தீ வைத்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

(கொழும்பு)

நீர்கொழும்பு, துங்கல்பிட்டிய பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுளளது.

சம்பவத்தில் வர்ணகுலசூரிய அசித்த சரத்குமார (36 வயது) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே கொல்லப்பட்டவராவார். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

அயல் வீட்டாருடன் ஏற்பட்ட முன் விரோதமே இந்த படுகொலைக்கு காரணமாக இருககலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இக்கொலை சம்பவம் தொடர்பாக நீர்கொழும்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாணவர் அந்தஸ்து தற்காலிகமாக இரத்து

(கொழும்பு)

முதல் வருட மாணவி ஒருவரை பகிடிவதைக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ரூஹுணு பல்கலைக்கழகத்தின் 5 மாணவர்களின் மாணவர் அந்தஸ்து தற்காலிகமாக பறிக்கப்பட்டுள்ளது.

இந்த ஐந்து மாணவர்கள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெற்று வருவதாக ரூஹுணு பல்கலைக்கழகத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

கொழும்பு - வெள்ளவத்தை பகுதியைச் சேர்ந்த மாணவி ஒருவர் அண்மையில் ரூஹுணு பல்கலைக்கழக சிற்றுண்டிச் சாலையில் வைத்து பகிடிவதைக்கு உட்டுத்தப்பட்டநிலையில், அவர் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விமான நிலைய விஸ்தரிப்பு பணி மீண்டும் இந்த ஆண்டு ஆரம்பம்

(கொழும்பு)



பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தி மற்றும் விரிவாக்கல் நடவடிக்கைகளின் இரண்டாவது கட்டம் இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்படும் என விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் பிரியங்கார ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர், விமானப் பயணிகளுக்கு மேலதிகமான நவீன வசதிகளையும் சேவைகளையும் பெற முடியும் என தெரிவித்துள்ளார்.

இது தவிர இந்த திட்டத்தின் கீழ் பயணிகளுக்கான புதிய பாலம் ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்த பாலத்தின் ஊடாக மேலதிகமாக 8 பயணிகள் பாதைகள் அமையவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## எல்லைதாண்டும் இந்திய மீனவர் விவகாரம் இரு தரப்பு பேச்சுக்கள் தீர்வு இன்றி முடிவு


(கொழும்பு)

எல்லைதாண்டும் இந்திய மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக சர்வதேச கடல் எல்லைகளை வரையறை செய்துகொள்ள இந்திய - இலங்கை அரசுகள் தவறிவிட்டன.

இலங்கை மீனவர்களுக்கு இடையிலான மேற்படி பிரச்சினையை தீர்ப்பதற்காக நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை இணக்கமின்றி முடிவடைந்துள்ளதாக, பேச்சுவார்த்தையில் பங்கேற்ற அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது இரண்டு தரப்புக்களும் சர்வதேச கடல் எல்லையை மதித்து நடப்பதென்பது தொடர்பில் இணக்கங்களை ஏற்படுத்திக கொள்ளவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் கடந்த இரண்டு நாட்களாக இடம்பெற்ற இந்த பேச்சுவார்த்தையின் போது சர்வதேச கடல் எல் லையை மதித்து நடத்தப்ப தென்று இலங்கையின் நிலைப்பாட்டுக்கு இந்தியா உ்ரிய பதில்களை வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



சர்வதேச கடல் எல்லை தொடர்பில் இந்தியாவுடன் எந்த ஒரு இணக்கப்பாட்டுக்கும் வரமுடியாது என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரி வித்துள்ளார்.

இந்திய பேச்சுவார்த்தைக் குழுவுக்கு வெளியுறவு அமைச்சின் இணைச் செயலாளர் ஹார்ஸ் வர்தனும் இலங்கையின் குழுவுக்கு வெளியுறவு அமைச்சின் மேலதிக செயலாளர் சேனுக்க செனவிரட்னவும் தலைமை தாங்கினர்.

## காணிப் பிணக்குகளை தீர்க்க தனியான பிரிவு அமைப்பு

(கொழும்பு)

பொது மக்களுக்கு ஏற்படும் காணித் தகராறுகளை கையாள்வதற்கு குற்றத்தடுப்புத் திணைக்களம் விசேட ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

காணி தொடர்பில் பிரச்சினைகள் எதுவும் இருக்குமாயின் அது குறித்து நடவடிக்கை எடுக்க குற்றத் தடுப்புத் திணைக்களத்தில் தனியொரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

காணிப்பிரச்சினைகள் குறத்து முறையிட விசேட தொலைபேசி இலக்கம் ஒன்றும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. அதன்படி 24 மணித்தியாலங்களும் இயங் கும் வகையில் 1933 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

காணி அதிகாரத்தை சூழ்ச்சி செய்து பெற்றுக் கொள்ளுதல், பலாத்காரமாக காணிகளை கையகப்படுத்தல் என்பவை குறித்து பொதுமக்கள் முறைப்பாடு செய்ய முடியும் எனத் தெரிவிக்கபபடுகிறது.

## கழுத்து நெரித்து சங்கிலி அபகரிப்பு

### இராணுவ வீரர் கைது

(கொழும்பு)

கனசிங்கபுர பஸ் நிலையத்தில் இருந்து மினுவாங்கொட நோக்கி பயணித்த தனியார் பயணிகள் பஸ்ஸில் பெண் ஒருவரின் கழுத்தை நெரித்து இராணுவ வீரர் ஒருவர் தங்கச் சங்கிலியை களவாடியுள்ளார்.

கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை பிடுங்கிக் கொண்டு ஓட முயற்சித்த குறித்த இராணுவ வீரரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்துள்ளனர்.

அதன் பின்னர் வெல்லவீதி பொலிஸார் சந்தேகநபரை கைது செய்து களவாடப்பட்ட இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் இலங்கை இராணுவ தலைமையகத்தில் முதலாவது ஆயுத புலனாய்வுப் படையில் கோப்ரல் பதவியிலிருந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வெல்லவீதி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கையரின் சடலம் இந்தியாவுக்கு செல்கிறது

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரணமான இலங்கையர் ஒருவரின் சடலத்தை பொறுப்பேற்க இலங்கையில் அவருக்கு உறவினர்கள் எவரும் இல்லை என்பதால் சடலம் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்தியாவில் உள்ள குறித்த நபரின் மனைவி விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இவ்வாறு சடலம் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. தான் தங்கியிருந்த வீட்டில் திடீரென ஏற்பட்ட இதயநோயினால் இலங்கைப் பிரஜையான பசுபதிப்பிள்ளை சிவானந்தன் அண்மையில் மரணமானார்.

இவருடைய சடலத்தை இலங்கைக்கு அனுப்பி வைக்க ஜெத்தாவிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக சவுதித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 20 வருடங்களாக சவுதியில் தொழில் புரிந்த பசுபதிப்பிள்ளையின் சடலத்தைப் பொறுப்பேற்க இலங்கையில் அவருக்கு உறவினர்கள் இல்லை என ஜெத்தாவிலுள்ள இந்தியத் தூதரக நலன்புரி பிரிவு அதிகாரி எஸ்.டி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

சென்னையிலுள்ள ருக்மணிதேவி என்ற பசுபதிப்பிள்ளை சிவானந்தனின் மனைவி விடுத்துள்ள கோரிக்கைக்கு அமைய அவருடைய சடலத்தை சென்னைக்கு அனுப்பிவைக்க உதவுமாறு இலங்கை தூதரக அதிகாரிகளிடம் இந்தியத் தூதரக அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## துமிந்தவுக்கு தொடர்ந்தும் சிங்கப்பூரில் சிகிச்சை

(கொழும்பு)



ஆளும் கட்சியின் நாடாளுமனற உறுப் பினர் துமிந்த சில்வா இன்னும் மூன்று மாதங்களில் நாடு திரும்புவார் என எதிர்ப் பார்ப்பதாக நுகேகொடையில் அமைந்துள்ள துமிந்த சில்வாவின் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் காயமடைந்த துமிந்த சில்வா சிங்கப்பூரில் தற்போது சிகிச்சைப்பெற்று வருகிறார். அவரால் தற்போது மற்றவருடன் தொடர்புகளை ஏற்படுத்த முடிகிறது. அருகில் உள்ளவர்களை இனங்காணமுடிகிறது எனவும் நுகேகொடையில் உள்ள அலுவலகத்துடன் அவர் தொடர்புகளை ஏற்படுத்தி வருவதாக அலுவலக அதிகாரி தெரிவித்துள்ளார்.

பந்தியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.

ஜப்பான் அடிக்கடி இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கும் நாடு. சுனாமி என்பது ஜப்பானியச் சொல். அண்மையில் சுமாத்திரா தீவுக்கு அண்மையில் ஏற்பட்ட பூகம்பம் காரணமாக இலங்கையின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் கடல் அலை மிக வேகமாக ஊர்களுக்குள் வீந்ததன் காரணமாக பெருந்தொகையான மனிதர்கள் இறந்தனர். சொத்துக்கள் அழிந்தன.

ஜப்பான் போன்ற முன்னேறிய நாடுகள் இதுபோன்ற அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் பல்வேறு வழிமுறைகளைக் கையாளுகின்றன. பலகையால் அமைக்கப்பட்ட வீடுகளும், வீடுகளில் குறைந்தளவு பொருட்களைப் பயன்படுத்தலும், சுனாமி உண்டாவது தொடர்பான முன்னெச்சரிக்கை வழங்குவதற்கான நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தலும், பாதுகாப்பான இடங்கள் அமைத்தலும் இவற்றுள் சிலவாகும்.

41) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.

1. குறைந்த .................................... 2. அண்மையில் ....................................

3. நவீனம் .................................... 4. வேகமாக ....................................

5. இயற்கை.................................... 5. சில ....................................

42) கடல் அலைகள் வேகமாக ஊருக்குள் வருவதை எவ்வாறு அழைப்பர்?

..............................................................................................................................

43) 'சுனாமி' எனும் சொல் எந்த மொழியிலிருந்து வந்ததாகும்?

..............................................................................................................................

44) இவ்விபத்து எவ்வகையான பாதிப்புகளை ஏற்படுத்தும்?


..............................................................................................................................


45) ஜப்பான் சுனாமியிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப்பயன்படுத்தும் இரண்டு வழிமுறைகள் தருக.

..............................................................................................................................

பின்வருவனவற்றின் ஆங்கிலப் பெயர்களை எழுதுக.

46) 
..............................

47) 
..............................

48) 
..............................

49) 
..............................

50) நான் விரும்பி வளர்க்கும் செல்லப்பிராணி என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலைகளுடன் அமைந்த 06 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.

## கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வெளியீடு - 15 கேள்விகளின் விடைகள்

01. 4
02. 3
03. 4
04. 3
05. 2
06. கணவாய்
07. 1. Pen 2. Ten
08. ரூபா 19.00
09. 05
10. இல்லை ஏனெனில் 21 பலூன்கள் வேண்டும். அவளிடம் 19 மட்டுமே யுண்டு.
11. 4
12. 4
13. அறம்
14. சினம்
15. விளம்பேல்
16. தொழுவது
17. புளி
18. 10
19. 49
20. 123456
21. 3
22. 4
23. 3
24. 1
25. 2
26. 3
27. 2
28. 3
29. 4
30. 2
31. 14
32. இலங்கை
33. வட்டம்
34. புதுமை, மைதானம்
35. 3/8
36. 4
37. 1
38. 4
39. 3
40. 1
41. 1) ளை 2) ழை 3) ண் 4) ண் 5) லா



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I

1 மணி

# கல்வி முரசு


வெளியீடு 16




இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

பொருத்தமற்ற படத்தின் கீழ்க் கோடிடுக.

01)



1)



2)


3)

02)


1)


2)


3)

03)

அ
1)


E
2)

P
3)


04)



1)



2)


3)


05)


1)


2)


3)

வீட்டிலிருந்து புறப்பட்ட ரிசானா மீண்டும் வீட்டுக்குத் திரும்பிய வரைபடம் தரப்பட்டுள்ளது. கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.




06) மேற்குத் திசையில் எத்தனை முறை திரும்பினாள்?

..............................................................

07) அவள் அதிகமாகத் திரும்பியது வலது பக்கமா? இடது பக்கமா?

..............................................................

08) இறுதியாக வீட்டுக்குச் செல்லும்போது எப்பக்கமாகத் திரும்பினாள்?

..............................................................

09) நிசானா பயணம் செய்த மொத்தத் தூரம் எவ்வளவு?


..............................................................................................................

10) அவள் ஒரு நாளைக்கு 4 முறை இதுபோல் நடந்தால் ஒரு நாளில் பயணம் செல்லும் தூரம் எவ்வளவு?

..............................................................................................................

**பொருத்தமான சொல்லைத் தெரிந்து கோடிடுக.**

பருவ கால மழை பெய்யத் தொடங்கியது. மரஞ் செடி கொடிகள் 11. (நீலம், பச்சை, மஞ்சள்) நிறமாகக் காட்சியளித்தன. ஆறு, குளம் 12. (நீரால், மண்ணால், கல்லால்) நிரம்பி வழிகின்றன. சிறுவர்கள் 13. (கப்பல், கார், விமானம்) செய்து விளையாடுகின்றனர். உழவர்கள் 14. (கவலையுடன், மகிழ்ச்சியுடன், கோபத்துடன்) வயலுக்குச் செல்கின்றனர். அவர்கள் ஆர்வத்துடன் 15. (கதைக்க, பாட்டுப்பாட, வேலைசெய்ய) ஆரம்பித்தனர்.




**கடந்த 5 வருடங்களில் கேகாலை மாவட்டத்தின் சிறுபோக, பெரும்போக நெல் உற்பத்தி தரப்பட்டுள்ளது. தரப்பட்ட வினாக்களுக்கு வரைபைக் கொண்டு விடையளிக்க.**

16) 1997 ஆம் வருடத்தில் மொத்த நெல் உற்பத்தி?
1. 3000 கி.கி 2. 6000 கி.கி 3. 60000 கி.கி

17) நெல் உற்பத்தி கூடிய வருடம்?
1. 1996 2. 1999 3. 1998

18) நெல் உற்பத்தி குறைந்த வருடம்?
1. 1997 2. 1998 3. 1995

19) சிறுபோகத்தில் கூடிய நெல்லுற்பத்தியான வருடம்?
1. 1998 2. 1999 3. 1995

20) பெரும்போகத்தில் குறைந்த நெல்லுற்பத்தியான வருடம்?
1. 1996 2. 1997 3. 1999

21) 1998 ஆம் வருடத்தில் சிறுபோகத்திற்கும் பெரும்போகத்திற்கும் இடையிலான வித்தியாசம்?
1. 2000 கி.கி 2. 5000 கி.கி 3. 4000 கி.கி

22) 5 வருட காலத்திலும் பெரும்போகத்தில் மொத்த நெல் உற்பத்தி.
1. 39000 கி.கி 2. 16000 கி.கி 3. 23000 கி.கி

23) 5 வருட காலத்திலும் சிறுபோகத்தில் மொத்த நெல்லுற்பத்தி?
1. 1600 கி.கி 2. 39000 கி.கி 3. 15000 கி.கி



**சொற்களைச் சரியாக எழுதி கருத்துள்ள வசனமாக்குக.**

24) உள்ள / திமிங்கிலம் / உலகில் / பெரியது / விலங்குகளில் / மிகப் / ஆகும்.

..............................................................................................................

25) சென்றோம் / கடற்கரைக்கு / நானும் / உலாவச் / தாத்தாவும் / நேற்று / மாலை

..............................................................................................................

**தரப்பட்ட வாக்கியம் பிழை என்பதற்கான காரணத்தைத் தெரிந்து கோடிடுக.**

26) சமீம் ஆமையின் இறகொன்றை எடுத்து வந்தான்.
1) சமீமுக்கு கண்பார்வை குறைவு 2) இறகு காற்றில் பறந்து செல்லும்
3) ஆமைக்கு இறகு காணப்படாது

27) மா மரத்திலிருந்து விழுந்த பழம் காற்றில் மிதந்து சென்றது.
1) அன்று காற்று வீசவில்லை 2) மரத்திலிருந்து பழம் கீழே விழாது
3) மாம்பழம் நிறை கூடியது காற்றில் மிதந்து செல்லாது


28) தீக்கோழி பறந்து சென்று பலா மர உச்சியில் நின்றது.
1) தீக்கோழி பறக்க முடியாத பறவையாகும் 2) தீக்கோழி ஒரு பறவையல்ல
3) பலா ஒரு செடியாகும்


**கோலத்தை அவதானித்து அடுத்துவரும் உருவைத் தெரிவு செய்க.**

29) 1 5 9 - 1) 11 2) 13 3) 15

30) 

31) T U V - 1) A 2) X 3) W

32) 

33) 

**சரியான விடையைத் தெரிந்து கோடிடுக.**

34) வானில் எப்போதும் காணப்படுவது?
1. சூரியன் 2. சந்திரன் 3. வெளி

35) பாடசாலையில் எப்போதும் இருப்பது?
1. கட்டடம் 2. அதிபர் 3. ஆசிரியர்

36) படகு ஓட்டுவதற்குத் தேவையானது?
1. பாய் 2. துடுப்பு 3. மரம்

37) கதிரையொன்றில் எப்போதும் காணப்படுவது?
1. பிரம்பு 2. குசன் 3. கால்

38) நாய் எந்நேரமும்.
1. குரைக்கும் 2. வாலை ஆட்டும் 3. நாலுகால் பிராணி

39) புகையிரதத்தில் காணப்படாதது.
1. சில்லு 2. டயர் 3. இருக்கை

40) நாட்காட்டியொன்றில் இருக்க வேண்டியது?
1. எண்கள் 2. முள் 3. படம்

விசேட வினாத்தாள் I - தரம் 05 - 2012 - கல்விமுரசு

# தேசிய அணியில் ஜனகன்



(யாழ்ப்பாணம்)

யாழ். ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் சச்சிதானந்தம் ஜனகன் என்ற மாணவன் கரப்பந்தாட்ட கிரிடா சக்தி தேசிய குழாமிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இம்மாணவர் 2009, 2011ஆம் ஆண்டுகளில் முறையே பாடசாலைக் கரப்பந்தாட்ட 16, 17 வயதுப் பிரிவு அணிக்குத் தலைமை தாங்கி மாகாண மட்டத்தில் முதலாம் இடங்களைப் பெற்றதுடன் தேசிய போட்டிகளில் விளையாடும் அணிக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

இம்மாணவனின் சாதனையை பாடசாலை அதிபர் க. விஜயதேவன் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டியுள்ளனர். (உ)

விளையாட்டுச் செய்திகள்

# ஞானமுருகன் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட கால்பந்துத் தொடரில் ஞானமுருகன் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை 3.30 மணியளவில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் றோயல் அணியை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதின.

இரு அணிகளும் ஆரம்பம் முதல் சிறபபான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தன. இருப்பினும் ஞானமுருகன் முன்கள வீரர் ஜெகன் சிறப்பானதொரு கோலை அடித்து அணியை முன்னிலைப்படுத்தினர். தொடர்ந்து இரு அணிகளாலும் கோல் போடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அது கைகூடவில்லை. இறுதியில் ஞானமுருகன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இத்தொடரின் சிறந்த கோல் அடித்த வீரராக ஞானமுருகன் அணியைச் சேர்ந்த தசரதனும், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியைச் சேர்ந்த சயந்தனும், போட்டியின் ஆட்டநாயகனாக அதே அணியைச் சேர்ந்த தீபனும், தொடர் நாயகனாக றோயல் அணியைச் சேர்ந்த கையகோவனும் தெரிவானார்கள். (93)

# சிறப்புற நடைபெற்ற பொங்கல் தினப் போட்டிகள்



(நெல்லியடி)

பருத்தித்துறை கொட்டடி கிராம பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட தைப்பொங்கல் விளையாட்டுக்கள் சிறப்புற நடைபெற்றது.

இதில் சிறுவர்களுக்கான விளையாட்டுகள் மற்றும் ஆண், பெண்களுக்கான கயிறு இழுத்தல் மற்றும் வயது அடிப்படையில் பளுதூக்கும் போட்டிகள் என்பன இடம் பெற்றது.

பளுதூக்கும் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு:

30 வயதிற்குட்பட்டோருக்கான போட்டியில் அலெக்ஸ்சாண்டர் முதலாமிடத்தையும், ஆர். ராசேந்திரம் இரண்டாமிடத்தையும் பிடித்துக்கொண்டனர்.

30 வயதிற்கும் மேற்பட்டோருக்கான போட்டியில் த. ஆதவன் முதலாமிடத்தையும், து. நாகராஜன் இரண்டாமிடத்தையும் பிடித்துக் கொண்டனர்.

50 வயதிற்கு மேற்பட்டோருக்கான போட்டியில் தே. தேவராஜன் முதலாமிடத்தைப் பிடித்தார்.

இப்போட்டிக்கு நடுவர்களாக துள்ளுமீன் விளையாட்டுக்கழக உடற்கட்டழகு கலை பயிற்றுநர் பா. சிவானந்தராசா, பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட பாரம் தூக்கும் போட்டியில் நான்கு முறை முதலாமிடம் பிடித்த இ. சுதன் ஆகியோர் கடமையாற்றினர். (12)

# கொக்குவில் இந்து த்ரில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 3 ஓட்டங்களால் த்ரில் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி அண்மையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பங்குஜன் 28, ஜதாஸ் 21, சிலோசன் 14, திவாகர் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோகுலன் ஐந்து, டர்வின் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி சகல விக்கெட்டுக்க்ளையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரேஜ் 20, சமிதரன் 15, கோகுலன் 7 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராகுலன் மூன்று, சிலோசன், பங்குஜன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

10 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 86 ஓட்டங் களைப் பெற்றது. இதில் ஆதித்தன் 23, பங்குஜன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வதுசனன், கோகுலன் மூன்று, டர்வின் இரண்டு விக்கெட்டுக் களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 96 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஒட்டங்களைப் பெற்று 3 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் வதுசனன் 28, கோகுலன் 15, சர்மிகன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பங்குஜன் நான்கு, ராகுலன் மூன்று, ஆதித்தன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர், (93)

# பேர்த்தில் இந்தியா இனிங்ஸ் தோல்வி; தொடரைக் கைப்பற்றியது அவுஸ்ரேலியா

(பேர்த்)

இந்திய அணிக்கெதிரான பேர்த் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி இனிங்ஸ் மற்றும் 37 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை அவுஸ்ரேலிய அணி கைப்பற்றியது.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி பேர்த்தில் நடைபெற்றது. இதில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தை இந்திய அணி தொடர்ந்தது. ராவிட், ஹோலி இணை ஐந்தாவது விக்கெட்டுக்காக சிறப்பாக ஆடினர். இருப்பினும் ராவிட் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த வீரர்கள் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுக்க இறுதியில் இந்திய அணி இரண்டாவது இனிங்ஸ் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஹோலி 75, ராவிட் 47 ஓட்டங்களைப் பெற்றனர் ஏனைய அனைத்து வீரர்களும்



சொற்ப ஓட்ட எண்ணிக்கையில் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஹில்பெனாஸ் 4, சிடில் 3, ஸ்டார்க் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக வோர்னர் தெரிவானார். ஒரு போட்டி எஞ்சியுள்ள நிலையில் அவுஸ்ரேலிய அணி டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாய்னா வெளியேற்றம்

(கோலாலம்பூர்)

மலேசிய ஓப்பன் பட்மின்ரன் தொடரின் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில், இந்திய வீராங்கனை சாய்னா நேவல் தோல்வியடைந்தார்.


மலேசிய தலைநகர் கோலாலம்பூரில், மலேசிய ஓப்பன் பட்மின்ரன் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஒற்றையர் பிரிவு அரையிறுதியில், உலகின் நான்காம் நிலை வீராங்கனையான இந்தியாவின் சாய்னா நேவல், தரவரிசையில் முதலிடத்தில் உள்ள சீனாவின் இகான் வாங்கை எதிர்கொண்டார்.

இதன் முதல் செட்டை 13-21 என்ற கணக்கில் எளிதாக இழந்தார். தொடர்ந்து இரண்டாவது செட்டில் சாய்னா எழுச்சி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.



ஆனால் இதிலும் சொதப்பிய சாய்னா, 15-21 என ஆட்டம் இழந்தார். 41 நிமிடம் நடந்த போட்டியின் முடிவில், 13-21, 15-21 என்ற நேர் செட் கணக்கில், சாய்னா நேவல தோல்வியடைந்து வெளியேறினார்.

# டோனிக்குத் தடை



(பேர்த்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்து வீசாத காரணத்தினால் இந்திய அணிக் கப்டன் டோனிக்கு சர்வதேச கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

அடுத்து வரும் போட்டியில் இத்தடை அமுலுக்கு வரும் எனவும் சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இத்தடை அடுத்து வரும் போட்டியில் அமுல்படுத்தப்பட்டால் அவுஸ்ரேலிய அணிக்கெதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் டோனி விளையாட முடியாத நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# முதலிடம் எமது இலக்கு

**மைக்கல் கிளார்க்**

(பேர்த்)

டெஸ்ட் போட்டித் தரப்படுத்தலில் மீண்டும் முதலிடம் பிடிப்பதே எமது இலக்கு என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

தொடரை வென்றது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. அடுத்து அடிலெய்ட் டெஸ்ட்போட்டியிலும் வெற்றி பெற முயற்சிப்பதே எங்களது தற்போதைய பணி. டெஸ்ட் தொடரில் முதலிடம் பிடிப்பதே அவுஸ்ரேலியாவின் இலக்கு. அந்தக் கட்டத்திற்கு நாம் படிப்படியாக நகர்வது போல் தெரிகிறது. இது விரைவில் நடக்கும் என்று எதிர்பார்க்கின்றேன். அணியில் உள்ள அனைத்து வீரர்களின் எண்ணமும் இதுவே என்றார்.

# தோல்விக்கு நானே பொறுப்பு

**டோனி**

(பேர்த்)

அவுஸ்ரேலிய அணியுடனான டெஸ்ட் தொடர் தோல்விக்கு யாரையும் நான் பொறுப்பாளியாக்க விரும்பவில்லை. அந்தப் பொறுப்பை முழுமையாக நானே ஏற்றுக்கொள்கின்றேன் என்று இந்திய அணி கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

துடுப்பாட்டம் பலவீனமாக உள்ளது. இந்திய கிரிக்கெட்டுக்கு மோசமான காலகட்டம் இது. கப்டன் என்ற முறையில் இந்திய அணியின் தோல்விக்கு என்னை தான் குறை கூற வேண்டும். நானே முக்கிய காரணம். இந்த தோல்விக்கு பொறுப்பேற்று கொள்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்..

# பாக். கிரிக்கெட் சபையுடன் டேவ் வட்மோர் சந்திப்பு

(லாகூர்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த வக்கார் யுனிஸ் ராஜினாமா செய்ததை தொடர்ந்து அந்த பதவிக்கு 30 இற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்தனர். இதில் இலங்கை, பங்களாதேஷ் அணியின் முன்னாள் பயிற்சியாளர் டேவ் வாட்மோரை பயிற்சியாளராக நியமிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விரும்புகிறது.

இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அழைப்பின் பேரில் வாட்மோர் நேற்று முன்தினம் காலை லாகூர் சென்றார். பயிற்சியாளர் பொறுப்பு தொடர்பாக அந்த நாட்டு கிரிக்கெட்



சபை நிர்வாகிகளை சந்தித்து பேசினார். ஆனால் இன்னும் இறுதி ஒப்பந்தம் ஏற்படவில்லை. இங்கிலாந்து தொடருக்கு பின்னர் அவர் பாகிஸ்தான் அணியின் முழு நேர பயிற்சியாளராக நியமிக்கப்படுவார் என்று தெரிகிறது.

## நடால் நம்பிக்கை

இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ள அவுஸ்ரேலிய ஒப்பன் ரென்னிஸ் தொடரில் சாதித்து கிண்ணம் வெல்வேன் என்று ஸ்பெயின் வீரர் நடால் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் செல்கிறது இந்திய நாடாளுமன்றக் குழு

(டில்லி)

பாகிஸ்தானில் குழப்பமான அரசியல் சூழ்நிலை நிலவினாலும், இந்திய நாடாளுமன்றக் குழு, திட்டமிட்டபடி இன்று அங்கு செல்லும் எனத் தெரிய வருகின்றது.

முக்கிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த, 14 எம்.பி.,க்களை கொண்ட இந்திய பிரதிநிதிகள் குழு, பாகிஸ்தானில் நான்கு நாட்கள் சுற்றுப் பயணம் செய்து, அங்குள்ள எம்.பி.க்கள், சட்ட நிபுணர்கள் அரசியல் கட்சி தலைவர்களுடன் ஆலோசனை நடத்தும் என மத்திய அரசு அறிவித்து இருந்தது.

இன்று தொடக்கம் எதிர் வரும் 19 ஆம் திகதி வரை இந்த குழு, பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும். இந் நிலையில், கடந்த சில நாட்களாக பாகிஸ்தானில் இராணுவத்துக்கும், அரசு பிரதிநிதிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு எழுந்துள்ளதால், அங்கு குழப்பமான அரசியல் சூழல் உருவாகியுள்ளது.

இதனால், இந்தியக் குழு திட்டமிட்டபடி பயணம் மேற்கொள்வதில் சந்தேகம் எழுந்தது. குழப்பமான அரசியல் சூழல் நிலவினாலும், இந்திய குழுவின் பயணத்தில் எந்த மாற்றமும் இருக்காது.

திட்டமிட்டபடி, இந்திய குழுவினருடன் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என பாகிஸ்தான் நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.




## சன நெரிசலில் சிக்கி பத்துப் பேர் பலி

(ரட்லம்)




மத்திய பிரதேச மாநிலம் ரட்லம் மாவட்டத்தில், ஜோவ்ரா நகர் அருகேயுள்ள உசேன் தெக்ரியில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி, 10 பேர் பலியாகினர். இவர்களில் ஆறு பேர் பெண்கள். மத்திய பிரதேச மாநிலம், ரட்லம் மாவட்டம், ஜோவ்ரா நகரில் உள்ளது உசேன் தெக்ரி. முஸ்லிம்களின் புனித தலம். மொகரம் பண்டிகைக்குப் பின், இங்கு நடக்கும் முக்கிய நிகழ்ச்சியில் ஏராளமானவர்கள் கூடுவர்.

அதேபோல், நேற்று முன்தினமும் ஏராளமானவர்கள் கூடியிருந்தனர். அதாவது, உசேன் தெக்ரியின் முன் திரண்டிருந்தனர். அதிகாலையில் அனைவரும் ஒரே நேரத்தில், உள்ளே நுழைய முயன்ற போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி, மூச்சு திணறி, 10 பேர் பலியாகினர்.

அதிகாலை கடுங்குளிரில் நீண்ட நேரம் காத்திருந்தவர்கள், குளிரில் இருந்து தப்பிப்பதற்காக, முண்டியடித்துக் கொண்டு உள்ளே நுழைந்த போது, நெரிசலில் சிக்கி இறந்திருக்கலாம் என, பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## முல்லைப் பெரியாறு பிரச்சினை சபரிமலை வருமானத்தில் சரிவு



(திருவனந்தபுரம்)

முல்லைப் பெரியாறு பிரச்சினை காரணமாக தமிழக பக்தர்கள் அதிகளவில் வராததால், சபரிமலையின் வருமானம் குறைந்துள்ளது" என்று தேவசம் போர்டு தலைவர் தெரிவித்துள்ளார். சபரிமலை ஐயப்பன் கோயில் கேரளாவில் இருந்தாலும் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் இருந்துதான் அதிகளவில் பக்தர்கள் செல்கின்றனர். இவர்களின் மூலமாகதான், சபரிமலை கோயிலுக்கு வருமானம் கிடைக்கிறது.

இந்த முறை மண்டல கால பூஜைகளுக்காக சபரிமலை கோயில் நடை கடந்த நவம்பர் 16 ஆம் திகதி திறக்கப்பட்டது. அடுத்த ஒரு சில வாரங்கள் வரை, வழக்கம்போல் பக்தர்கள் கூட்டம் அதிகளவில் இருந்தது. அப்போதுதான், முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை வெடித்தது.

தமிழ்நாட்டில் இருந்து சபரிமலை சென்ற வாகனங்கள் கேரளாவில் தாக்கப்பட்டன. இதனால், தமிழக பக்தர்கள் தங்களுடைய பாதுகாப்பு கருதி, தமிழ்நாட்டில் உள்ள ஐயப்பன் கோயில்களிலேயே விரதத்தை முடித்தனர். இதனால், சபரிமலையில் படிப்படியாக கூட்டம் குறைய தொடங்கியது. பக்தர்கள் வருகை குறைந்ததால் கோயில் வருமானமும் குறைந்தது.

## கடல் சீற்றம் வீடுகள் இடிந்து விழுந்தன

(காலாப்பட்டு)

புதுவை அருகே நேற்றுமுன்தினம் காலை திடீரென கடல் சீற்றம் ஏற்பட்டது. இதில் வீடுகள் இடிந்து விழுந்தது. தென்னை மரங்கள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டது.

புதுவையை அடுத்த தமிழக பகுதியான கோட்டக்குப்பம் வாடி மீனவ பகுதியில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்கு கடந்த 7 ஆண்டுகளாக கடல் சீற்றத்தால் அரிப்பு ஏற்பட்டு 100க்கும் மேற்பட்ட வீடுகள், கழிவறை, சிமெண்ட் சாலை, வலை பின்னும் கூடம், தென்னை மரம் உள்ளிட்டவை கடலில் அடித்து செல்லப்பட்டது.

இதையடுத்து, அப்பகுதி மீனவ மக்கள் பல்வேறு போராட்டங்கள் நடத்தினர். தமிழக அரசு மூலம் தற்காலிகமாக 200 மீற்றர் அளவுக்கு கருங்கல் கொட்டப்பட்டது. தொடர்ந்து ஏற்பட்ட கடல் சீற்றத்தால் கொட்டப்பட்ட கருங்கற்களும் கடலில் மூழ்கி கடல் நீர் ஊருக்குள் புகுந்து,



வீடுகள் அடித்து செல்லப்பட்டன.

இந்த நிலையில், சின்னமுதலியார்சாவடியில் நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் திடீரென கடல் சீற்றம் காணப்பட்டது. தென்னை மரம், வீட்டின் சுவர்கள் இடிந்து விழுந்து அடித்து செல்லப்பட்டது. பாதுகாப்பு கருதி மீனவ மக்கள் கோ்யில்கள், உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

## "எல்லைப்பிரச்சினை" இந்தியா - சீனா பேசுவதற்கு இணக்கம்

(டில்லி)

இந்தியா-சீனா இடையேயான எல்லைப் பிரச்சினை குறித்து இருநாட்டு பிரதிநிகள் பங்கு பெறும் 15 ஆவது கூட்டம் புது டில்லியில் இன்றும் மற்றும் நளை செவ்வாய்கிழமையும் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் இந்தியாவின் சார்பில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் தலைமையிலான குழுவும் சீனாவின் தரப்பில் டாய்பிங் குவோ தலைமையிலான குழுவும் பங்கேற்க உள்ளது.

இக்கூட்டம் கடந்த நவம்பர் மாதம் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் இடம்பெற இருந்தது. அவ் வேளையில் டில்லியில் புத்த மத திருவிழா நடைபெற்றது.

அதில் தலாய்லாமா பங்கேற்றார். இதற்குசீனா எதிர்ப்பு தெரிவித்தது. மதசார்பற்ற நாட்டில் இது போன்ற விழாக்களுக்கு தடைவிதிக்க முடியாது என இந்தியா தெளிவாக கூறியதையடுத்து பேச்சுவார்த்தை காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில் இந்த பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. எல்லை பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கடந்த 2003 ஆம் ஆண்டில் இருநாடுகளிடையே ஒப்பந்தம் ஏற்பட்டது.

முதல் ஐந்து சுற்றுபேச்சுவார்த்தை சுமுகமாக சென்று கொண்டிருந்தது. தொடர்ந்து எழுந்த பல்வேறு பிரச்சினை காரணமாக தற்போது மோசமான நிலையில் பேச்சுவார்த்தை நடத்தும் நிலையில் இருப்பதாக குழுவில் இடம்பெற்றுள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு சொந்தமான காஷ்மீர் மாநிலத்தில் மட்டும் சுமார் 38 ஆயிரம்சதுர கிலோ மீற்றர் தூரத்திற்கு சீனா ஆக்ரமிப்பு செய்து கொண்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் இந்தியாவிற்கு சொந்தமான அருணாசல பிரதேச மாநிலத்தில் சுமார் 98 ஆயிரம் சதுர கிலோமீற்றர் தூரத்திற்கு உரிமை கொண்டாடி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## அணுமின் நிலையம் திறக்க அப்துல்கலாம் வலியுறுத்தல்

(சென்னை)

கூடங்குளம் அணுமின் நிலைய பிரச்சினையை அரசியல் ரீதியாகவும், செயற்திட்ட ரீதியாகவும் விரைவில் தீர்க்க வேண்டியது அவசியம்.

இதற்காக நாடு தழுவிய பிரசாரம் ஒன்றையும் ஆரம்பிக்க வேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு, முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் கடிதம் எழுதியுள்ளார்.

அதில் மேலும் கடந்த நவம்பர் 5 முற்றும் 6 ஆம் திகதிகளில், கூடங்குளம் அணுமின் நிலையத்தை நேரில் பார்த்து விஞ்ஞானிகள், பொறியியலாளர்களுடன் விரிவான ஆலோசனை நடத்தினேன். அணுமின் நிலைய தொழில் நுட்பங்களை, பாதுகாப்பு அம்சங்களை ஆய்வு செய்தேன். கதிரியக்க பாதுகாப்பு, உள் கட்டமைப்பு பாதுகாப்பு, தெர்மோ ஹைட்ராலிக் பாதுகாப்பு உள்ளிட்ட தொழில்நுட்பங்களில், இந்த நிலையம் கட்டப்பட்டுள்ளதை அறிந்தேன்.

அதன்பின் கூடங்குளம் அணுமின் நிலையம் திறப்பதில் ஏற்படும் காலதாமதம் குறித்து கவலைப்படும் அப்பகுதிகளை மக்களை சந்தித்துப் பேசினேன். அப்போது, அணுமின் நிலையத்தை திறப்பதில் ஏற்படும் காலதாமதத்தால் தாங்கள் வேலை இல்லாமல் இருப்பது, அணுமின் நிலையத்திற்காக கையகப்படுத்திய நிலத்திற்கு இழப்பீடு தருவதில் ஏற்படும் தாமதம், அணுமின் நிலைய பாதுகாப்பு மற்றும் முக்கியத்துவம் குறித்து, முறையான விழிப்புணர்வு பிரசாரத்தை மேற்கொள்ளாதது குறித்து, என்னிடம் அவர்கள் கவலை தெரிவித்தனர் எனவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## வாழ்வாதாரத்திற்கு வழங்கிய ஆடுகள் விற்பனை

(காலாப்பட்டு)

தமிழக அரசு வழங்கிய இலவச ஆடுகள் இறைச்சிக் கடைகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு சார்பில் இலவச ஆடுகள் வழங்கப்படுகின்றன.


விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, அதை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்கு இலவசமாக ஆடுகள் வழங்கப்பட்டன.

இதில் நோயுள்ள ஆடுகளும் இருப்பதாக செய்தி பரவியது. இந்நிலையில் தங்களது ஆடுகளும் நோயுள்ள ஆடுகளாக இருக்குமோ? இறந்து விடுமோ? என்ற அச்சத்தால் குறைந்த விலைக்கு பயனர்ளிகள் விற்று விடுகின்றனர்.

இதனைப் பயன்படுத்திக் கொள்ளும் தரகர்கள் 1000 கொடுத்து ஆடுகளை வாங்குகின்றனர்.

### அடடே..!

மதி



சோதனை இப்படி தொடரும்னு நான் நினைக்கவே இல்லை, சார்! முதல்ல கிறிஸ்துமஸ், பிறகு நியூ இயர், இன்னிக்கு பொங்கல்... வரிசையா ஞாயிற்றுக்கிழமை அன்னிக்கு வந்து அரசு விடுமுறைகள் அநியாயமாப் போய்கிட்டிருக்குது..!

## சென்னையில் "காணும் பொங்கல்"

(சென்னை)

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை நேற்று கொண்டாடப்பட்டது. இதற்காக, சென்னையில் வசிப்பவர்களில் பெரும்பாலானோர் கிராமங்களுக்கும், சொந்த ஊர்களுக்கும் புறப்பட்டுச் சென்றுள்ளனர். நாளை மறுநாள் காணும் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.

இந்த நாளில் உறவினர்களை சந்தித்து வாழ்த்து சொல்வது, குடும்பத்துடன் பொழுதுபோக்க கடற்கரை, சுற்றுலா தலங்களுக்கு செல்வது வழக்கம் இதனைக் காணும் பொங்கல் என்று சொல்வார்கள்.

சென்னையில் மெரினா, பெசன்ட் நகர் கடற்கரையில் பல இலட்சம் மக்கள் கூடுவார்கள். அதனால் கடற்கரையில் தடுப்பு கம்புகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்காலிக கண்காணிப்பு கோபுரங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மெரினா கடற்கரையில் 2 ஆயிரம் பொலிஸாரும், பெசன்ட் நகர் கடற்கரையில் 500 பொலிஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# கடற்கொள்ளையர்கள் சிக்கினர்

இந்து சமுத்திர கடற்பரப்பில் வைத்து 13 கடற்கொள்ளையர்களை பிரித்தானிய கடற்படையினர் சிறைபிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரித்தானிய கடற்படையின் உலங்குவார்னூர்திகள் நடத்திய எச்சரிக்கை வேட்டுக்களை பொருட்படுத்தாது குறித்த கொள்ளையர்களின் கப்பல் பயணித்துள்ளதனையடுத்து, விரைவு படகுகள் மூலம் குறித்த கப்பலை அணுகிய பிரித்தானிய கடற்படையினர் கடற்கொள்ளையர்களை கைது செய்ததுடன், ஆயுதங்களையும் மீட்டுள்ளனர். உலகளாவிய சர்வதேச வர்த்தக கடல் மார்க்கங்களைப் பாதுகாப்பதில் தமது நாட்டு கடற்படை மற்றும் கரையோரபாதுகாப்பு படையினர்கள் முக்கிய பணியாற்றி வருவதாக பிரித்தானிய பாதுகாப்பு செயலாளர் கூறியுள்ளதோடு, சர்வதேச கடல்போக்கு வரதத்துக்கள் மீதான கடற்கொள்ளையர் களின் தாக்குதல்களை பொறுத்துக் கொள்ள முடியாதென பிரித்தானிய கடற்படை கப்டன் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# மியன்மாருடனான உறவுகளை புதுப்பிக்கும் அமெரிக்கா

மியன்மாருடனான முழுமையான உறவுகளை புதுப்பிக்கும் வகையில் தூதுவர்களைப் பரிமாற்றிக் கொள்ளும் நடவடிக்கையை தமது நாடு ஆரம்பிக்கவுள்ளதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் கூறியுள்ளார். மியன்மாரின் பிரபல அரச கொள்கை எதிர்ப்பார்ப்பாளர்கள் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டதை தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதே வேளை, சிறைகைதிகளின் விடுதலையானது முன்னோக்கி செல்லக்கூடிய குறிப்பிடத்தக்க படிநிலை என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார். சர்வதேச ரீதியாக மியன்மாருக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்க வேண்டுமாயின் சிறைகைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமென மேற்குலக நாடுகள் வலியுறுத்தியிருந்தன. அத்துடன் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மியன்மார் அரச அதிகாரிகளை பராக் ஒபாமா கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஹிஸ்புல்லா அமைப்பின் ஆயுதங்கள் களைய வேண்டும்


ஹிஸ்புல்லா அமைப்பிடமுள்ள ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் லெபனானை வலியுறுத்தியுள்ளார். ஹிஸ்புல்லா அமைப்பினரின் இராணுவ ஆளுமை குறித்து கவலை அடைவதாக லெபனான் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து செய்தியாளர் சந்திப்பில் பான் கீ மூன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முக்கியமாக கலந்துரையாடிவருவதாகவும், தேசிய ரீதியில் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்த ஜனாதிபதியை தாம் ஊக்குவிப்பதாகவும் பான் கீ மூன் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆயுதங்கள் அரசாங்க அனுமதியில்லாமல் உள்ளதாகவும், அதனை ஏற்றுக் கொள்ள முடியாதென



வும் ஐ.நா செயலாளர் நாயகம் சுட்டிக் காட்டியுள்ளார். லெபனானின் முன்னாள் பிரதமரின் கொலையுடன், ஹிஸ்புல்லா அமைப்பினர் உறுப்பினர் ஒருவருக்கும் தொடர்புள்ளதாக ஐ.நா பின்புலத்துடான நீதிமன்றம் கூறியிருந்தது. இந்த நிலையில் லெபனானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பான் கீ மூன் வரவேற்கப்பட மாட்டார் என ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஒருவர் தெரிவித்ததாக வெளிநாட்டு செய்திநிறுவனம் தெரிவித்திருந்தது.

## வெற்றிகரமாக விண்ணிற்கு சென்றது



வானிலையை ஆய்வு செய்து தகவல்களை சேகரிக்கும் பெங்கியூன்-2 என்ற செயற்கைக்கோளை சீனா வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளது. இந்த செயற்கைக்கோள் வானிலை, நீர் வளம் குறித்த தகவல்களை சேகரிக்கும் என்றும் அந்நாட்டின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.


ஹாங்காய் விண்கலத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இந்த செயற்கைகோள், லாங் மார்ச் 3ஏ என்ற ஏவுகணை மூலம் ஜிசாங் ஏவுகணைத் தளத்திலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த ஏவுகணையை சீன ஏவுகணைத் தொழில்நுட்ப ஆய்வு நிறுவனம தயாரித்துள்ளது. 157ஆவது முறையாக இந்த ரக ஏவுகணை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளதாக சீன அரசு தகவல் வெளியிட்டுள்ளது.

உலகச் செய்திகள்

## ஈராக் குண்டுத்தாக்குதலில் இருபது பேர் பலி

ஈராக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 20 பேர் பலியானதுடன், 70 பேர் காயமடைந்துள்ளனர். தென் ஈராக்கின் பஸ்ரா நகரில் நடைபெற்ற அராபியர்களின் கொண்டாட்டமொன்றின்போது ஷியா இன யாத்திரிகர்களை இலக்குவைத்தே இந்தக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக ஈராக் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸ சீருடை அணிந்தவாறு அவர்களின் போலியான அடையாள அட்டையுடன் சோதனைச் சாவடிக்குள் நுழைந்த ஒருவர், குண்டை வெடிக்கவைத்துள்ளார். மேற்படி இந்தக் கொண்டாட்டத்தின்போது தாக்குதல் நடத்தப்படலாமென்ற அச்சம் காரணமாக ஏற்கனவே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து இளவரசரின் மனைவிக்கு துருக்கியில் 22வருட சிறைத்தண்டனை



இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் இரண்டாவது மகன் இளவரசர் ஆண்ட்ரூவின் முன்னாள் மனைவி சாரா பெர்குசன் கடந்த 1986ஆம் ஆண்டு முதல் 1996ம் ஆண்டு வரை இளவரசர் ஆண்ட்ரூவுடன் வாழ்ந்து வந்தார். தற்போது கருத்து வேறுபாடு காரணமாக இவர்கள் இருவரும் விவாகரத்து செய்து கொண்டனர். சினிமா படத் தயாரிப்பாளராகவும், தொலைக்காட்சி ஆவணப்படத் தயாரிப்பாளராகவும் உள்ள இவர், ஆவணப்படம் தயாரிப்பதற்காக துருக்கி தலைநகர் அங்காரா அருகே உள்ள அனாதை குழந்தைகள் இல்லத்தில் இரகசியமாக படம் எடுத்ததாகவும். இதற்கு துருக்கி அரசிடம் முன் அனுமதி பெறவில்லை எனவும் சாராபெர் குசன் மீது துருக்கி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் சாராபெர்குசனுக்கு 22 ஆண்டுகள் சிறைத்தண்டனை கிடைக்க வாய்ப்புஉள்ளதாகத் தெரியவருகிறது.

## ஜேர்மனியை விட்டு அமெரிக்க இராணுவம் 2015இல் முற்றாக வெளியேறும்




மத்திய கிழக்கு நாடுகளுக்கும், ஆசியாவுக்கும் தன்னுடைய படைகளை அனுப்ப வேண்டி இருப்பதால் ஜேர்மனியில் இருந்த தன்னுடைய படைகளை அமெரிக்கா திரும்ப பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில் 10,000 முதல் 15,000 இராணுவ வீரர்கள் முதற்கட்டமாக வெளியேறுவர் என்றும் அமெரிக்காவின் நான்கு இராணுவக் குழுக்களில் மூன்று ஜேர்மனியில் உள்ளது. இதில் பல்லாயிரக்கணக்கில் வீரர்களும் இன்னொரு குழு இத்தாலியில் உள்ளதாகவும் இவை ஒவ்வொன்றாக சுழற்சிமுறையில் ஐரோப்பாவிலிருந்து புறப்படும் என்று அமெரிக்காவின் பாதுகாப்புத் துறை செயலர் பனேட்டா தெரிவித்தார்.

இங்கிருந்த பலர் சமீபத்தில்' ஆப்கானிஸ்தானிற்கும், ஈராக்கிற்கும் சென்று விட்டதால் இருப்பவர்களில் சிலரும் இனி மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று விடுவர் எனத்தெரிவித்த பனேட்டா, ஜேர்மனியில் மட்டும் முப்படைகளைச் சேர்ந்த 80,000 பேர் இருப்பதாகவும் ஆரம்பத்தில் 200,000 பேர் ஐரோப்பாவில் இருந்தனர். இப்போது இந்த எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்று தெரிவித்தார் பிரிட்டனும் ஜேர்மனியில் இருக்கும் தங்களுடைய 20,000 இராணுவ வீரர்களை எதிர்வரும் 2015ஆம் ஆண்டிற்குள் தன்நாட்டிற்கு திரும்ப அழைத்துக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளது.

## எதிர்ப்பில் இது ஒரு வகை

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தானின் தெற்கு வஜீரிஸ்தானில் வீடுகளுக்குள் புகுந்த தலிபான்கள், “ரிவி”, கணினிகள், மொபைல்போன்கள் ஆகியவற்றைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். தலிபான்கள், மேற்கத்திய பாணியிலான வாழ்க்கை முறைகள், மற்றும் நவீன தொழில்நுட்பங்களுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், தெற்கு வஜீரிஸ்தானில் உள்ள வானா பகுதியில் நேற்று, ருஸ்தம் பஜாரில் புகுந்த தலிபான்கள் சிலர் பல்வேறு கடைகள், வீடுகளுக்குள் புகுந்து அங்கிருந்த கணினிகள், “ரிவி”க்கள், மொபைல் போன்கள் ஆகியவற்றைக் கைப்பற்றி, சாலையில் குவித்து அவற்றுக்குத் தீ வைத்தனர். மவுல்வி நஜீர் தலைமையிலான தலிபான் பிரிவைச் சேர்ந்த இவர்கள், ஏற்கனவே, அப்பகுதியில் இந்தக் கருவிகளுக்கு தடை விதித்திருந்தும், அதை மக்கள் புறக்கணித்து விட்டதாக குற்றம்சாட்டியுள்ளனர்.

## மொசாட் உளவாளி லெபனானில் கைது

உளவாளி என்ற சந்தேகத்தில் லெப்னான் நாட்டு இராணுவம் ஒருவரைக் கைது செய்திருக்கிறது என்ற தகவலை கடந்த வியாழக்கிழமை லெபனான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவர் லெபனானுக்குள், இஸ்ரேலிய உளவுத்துறை மொசாட்டுக்காக உளவு பார்த்தார் என்பதே குற்றச்சாட்டு.

எலியாஸ் யோனஸ் என்ற பெயருடைய இவர், அரசு தொலைத்தொடர்பு நிறுவனம் ஒகேரோ-வின் பணியில் இருந்து ஓய்வு பெற்ற அதிகாரி எனவும் லெபனான் அரசுக்குச் சொந்தமான தேசிய ஊடக சேவை, கைது செய்யப்பட்ட மனிதரின் அடையாளங்களையும் வெளியிட்டுள்ளது. தலைநகர் பெய்ரூட்டில் இருந்து இயக்கப்படும் அல்-மனார் தொலைக்காட்சி சேவை, கைது செய்யப்பட்டுள்ள எலியாஸ் யோனஸ், லெபனானில் ரகசியமாக இயங்கிய எல்லா உளவாளிகளுக்கும் தலைவராக இருந்தவர் என்று வர்ணித்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ளவர் 35 ஆண்டுகளாக இஸ்ரேலிய உளவுத்துறை மொசாட்டுடன் தொடர்பில் இருந்தவர். லெபனானில் கடல் பாதுகாப்பு தொடர்பான தகவல்களை மொசாட்டுக்கு வழங்குவதே இவரது பிரதான வேலை என்றும் அத்துடன், தொலைத் தொடர்பு துறை கணினிகளில் இருந்து எடுக்கப்பட்ட பெயர்கள், தொலைபேசி இலக்கங்களை அவ்வப்போது மொசாட்டுக்கு வழங்கி வந்திருக்கிறார் என்றும் அல்-மனார் தொலைக்காட்சி சேவை குறிப்பிட்டுள்ளது. நீண்ட காலமாக மொசாட் தமது உளவாளிகளை லெபனானுக்குள் வைத்து இயக்கி வருகின்றது என்று அடிக்கடி குற்றம் சாட்டும் லெபனான் அரசு, இஸ்ரேலிய உளவுத்துறையுடன் தொடர்புகளை பேணும் நபர்களுக்கான மரண தண்டனை என சமீபத்தில் சட்டம் ஒன்றையும் இயற்றியுள்ளது.

# இலங்கையில் அதிகரிக்கும் சீன ஆதிக்கம்; தடுத்து நிறுத்த இந்தியா களம் இறங்கவேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் சீன ஆதிக்கத்தை தடுக்க இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டுமென அமெரிக்காவின் முன்னாள் இராஜதந்திரி வில்லியம் எவரி தெரிவித்துள்ளார். ஏற்கவே சீனா, இலங்கையில் பாரியளவில் ஆதிக்கம் செலுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். "சயினாஸ் நைட்மெயார், அமரிக்கன் ட்ரீம்:இன்டியா ஏஸ் நெக்ஸ்ட் க்ளோபல் பவர்" என்னும் நூலில் அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார். சீனாவுடனான உறவுகளை வரையறுக்குமாறு இந்தியா இலங்கைக்கு அழுத்தம்கொடுக்க வேண்டியது அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அம்பாந்தோட்டையில் சீனா துறைமுகம் அமைத்தபோது இந்தியா அதனைவேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார். வில்லியம் எவரி, சென்னைக்கான அமெரிக்க கொன்சொல்அதிகாரியாக கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அண்டை நாடுகளில் இந்தியா கூடுதல் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென அவர்வலியுறுத்தியுள்ளார். குறிப்பாக பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளில் கூடுதலான முனைப்பு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு விரிவுரையாளர்கள் மீது கண்காணிப்பைத் தீவிரமாக்குகிறது அரசு

(கொழும்பு)

இலங்கைப்பல்கலைக்கழகங்களில் கடமையாற்றும் வெளிநாட்டு விரிவுரையாளர்கள் மீதான கண்காணிப்பை வலுப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

பல்கலைக்கழகங்களில் நிலவி வரும் பிரச்சினைகளின் பின்னணியில் வெளிநாட்டு சக்திகள் இருப்பதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கையில் சில பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு தூதரகங்களின் உதவியுடன் வெளிநாட்டு விரிவுரையாளர்கள் கடமையாற்றி வருகின்றனர். இவ்வாறு கடமையாற்றி வரும் வெளிநாட்டு விரிவுரையாளர்களின் நடவடிக்கைகள் குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, பல்கலைக்கழகங்களில் கடமையாற்றி வரும் வெளிநாட்டு விரிவுரையாளர்கள் தொடர்பில் கண்காணிக்கப்படுவதாக குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அநேகமாக வெளிநாட்டு விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகங்களில் ஆங்கில பாடத்தை போதிக்கும் நோக்கில் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட விரிவுரையாளர்களுக்கு வெளிநாட்டு தூதரகங்கள் அனுசரணை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



தைப்பொங்கலை முன்னிட்டு இராணுவத்தின் 543 ஆவது படைப் பிரிவும் 27 ஆவது விஜயபாகு இன்பென்றி படைப் பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இரத்ததான நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் பொது வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இதன்போது இராணுவத்தின் 543 ஆவது படைப் பிரிவு அதிகாரி மேஜர் லெப்டினன்ட் கேணல் யூட் பெணான்டோ, இராணுவத்தின் 15ஆவது கெமுனு படைப் பிரிவு அதிகாரி மேஜர் குமார, 543ஆவது படைப் பிரிவு அதிகாரி கேணல் இராமநாயக்க மற்றும் மன்னார் வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி பியூனி பெணான்டோ ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது 50 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இரத்ததானம் செய்தனர்.

# யாழ்ப்பாணத்தில் புலிகளின் வலையமைப்பு வர்த்தகத்துறையில் மீண்டும் ஆதிக்கம்

## சிங்கள நாளிதழ் அதிர்ச்சித்தகவல்

(கொழும்பு)

புலிகளின் சர்வதேச வலை அமைப்பு யாழ்ப்பாணத்தின் வர்த்தகத்துறையில் மீண்டும் ஆதிக்கம் செலுத்த முயற்சித்துவருவதாக சிங்கள தினசரி ஒன்றுதகவல் வெளியிட்டிருக்கிறது. யாழ்ப்பாண வர்த்தக நடவடிக்கைகளில் புலிகள் ஆதிக்கம் செலுத்த முயற்சித்து வருவதாக சிங்கள பத்திரிகையொன்று குற்றம் சுமத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தின் அநேகமான துறைகளில் புலிகளின் சர்வதேச வலையமைப்பு முதலீடு செய்து அதன் மூலம் யாழ்ப்பாண வர்த்தகத்துறையில் ஆதிக்கத்தை செலுத்த புலிகளின் சர்வதேச வலையமைப்பு முயற்சிக்கின்றது. அத்துடன் வர்த்தக முயற்சிகளின் மூலம் ஈட்டப்படும் இலாபம் புலிகளின் நிதிக்கட்டமைப்பைச் சென்றடைகின் றது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மிகப் பிரபலமான வர்த்தகர் ஒருவருக்கு புலிகள் ஆதரவு வழங்கி வருகின்றனர். கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் சரக்கு போக்குவரத்தில் ஈடுபட்டு வரும் இந்த வர்த்தகருக்கு 16 பார ஊர்திகளை புலிகள் வழங்கியுள்ளனர். ஐரோப்பிய வாழ் புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்கள் இதற்கான நிதி உதவியை வழங்கியுள்ளனர் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவல்களை புலனாய்வுப் பிரிவினரும் உறுதிப்படுத்தியுள்ளனர். கொழும்பு யாழ்ப்பாணம் பஸ்கள் பிரபல ஹோட்டல்கள் உள்ளிட்ட பல்வேறு வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு புலிகள் ஆதரவளித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கும் படையினருக்கும் எதிரான கருத்துக்களை வெளியிடும் தொலைக்காட்சி அலைவரிசைகளும் யாழ்ப்பாணத்தில் ஒளிபரப்புச் செய்யப்பட்டு வருவதாகவும் சிங்கள ஊடகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தெல்லிப்பளை பகுதியில் டெங்கின் தாக்கம் அதிகரிப்பு

(அளவெட்டி)

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரிப்பிரிவில் தற்போது டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்த நிலையே காணப்பட்டது. குறிப்பாக அளவெட்டி, தெல்லிப்பளை ஆகிய பகுதிகளில் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இந்த நிலையில் தற்போதும் இங்கு பிரதேச செயலர் பிரிவில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதால் இதனை தடுக்கும் வகையில் முழுவீச்சில் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (93)

# நீர்கொழும்பில் விபசார விடுதி; நெருப்பு எடுக்கும் பிரதேச வாசிகள்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு - தலாதுவ பிரதேசத்தில் நவீன வசதிகளுடன் கூடிய ஆடம்பர வீடொன்றில் இரகசியமான முறையில் விபசாரம் நடத்தப்பட்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பிரதேசவாசிகள் நடத்திய எதிர்ப்பு ஆரப்பாட்டத்தை செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை இனந் தெரியாத நபர்கள் சிலர் எச்சரித்தனர்.

நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் பிரதேசவாசிகளால் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தலாதுவ வீதி - தில்லந்தூவ பிரதேசத்தில் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. இது தொடர்பான செய்தியை வெளியிட வேண்டாம் எனவும், பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதாகவும் அந்தக் குழுவினர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்ததோடு, ஊடகவியலாளர்களை அங்கிருந்து செல்லுமாறும் அச்சுறுத்தினர். இதற்கு பிரதேசவாசிகள் எதிர்ப்பு தெரிவித்ததோடு, இந்த செய்தியை வெளியிடுமாறும் ஊடகவியலாளர்களை தெரிவித்தனர். அந்த குழுவினர் ஊடகவியலாளர்களை தமது கமராவினால் படம் பிடித்ததோடு வீடியோவும் எடுத்தனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர், 'விபசார விடுதியை உடனடியாக அகற்று, 'பிரதேச மக்களின் கௌரவத்தை காப்பாற்று", 'தலாதுவ பிரதேச மக்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தாதே' என்பன போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தனர். இதனை அடுத்து பிரதேச மக்களுக்கும் குறிப்பிட்ட வீட்டின் உரிமையாளருக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம் பெற்றது. அச்சு, இலத்திரனியல் ஊடகங்களை சேர்ந்த பிரதேச ஊடகவியலாளர்கள் நான்கு பேர் இந்த ஆர்ப்பாட்டச் செய்தியை சேகரிக்கச் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பசு காத்தலின் பெருமை!



பசுக்காத்தலின் பெருமையையும்
காவாதொழிதலின் தீமையினையும் பற்றி
வேதாகமங்களும் மற்றும் நூல்களும் ஒன்று
போலவே தேத்திரிப்பன. அவற்றைப் பின்பற்றி
ஒழுகிவந்தது நமது புண்ணிய பூமி. ஆனால்
இக்காலத்து அவ்வொழுக்கம் மாறிவிட்டது.
பசுக்களைக்காப்பதும் காவாதொழிவதும் நிற்க
அவற்றை உண்டிப்பொருட்டாக வதை
செய்யாதிருந்த போதும். அதுவே பெரும்
புண்ணியமாகுமென்று சொல்லும் காலமாக
உள்ளது.

இக்காலக் கொடுமை அந்தோ! பசுவின் குருதி
ஒருதுளி நிலத்தில் வீழ்வதாயின் அதனின்றும்
பலகோடி அசுரர்கள் வந்து உதித்து உலகை
நாசம் செய்வர் என்று நூல்கள் கூறுகின்றன.
நாடோறும் மிருக மனித வயிற்றை நிரப்பும்
பொருட்டு வதைக்கப்படும் பசுக்களின் இரத்தம்
ஆறாகப்பெருகுமாயின் இந்த நாடு என்ன
அலங்கோலந்தான் படாது? இக் கொடிய
பாவம் நமது புண்ணிய நாட்டில்
வரத்தொடங்கி விட்டது என்பது அறிவோர்
துணிபாகும். பசுக்களிடம் கருணை
இல்லாதவர்களும் பசுக்கொலை
புரிவோரும் பசு இறைச்சி உண்போரும்
ஆகிய பிறமதத்தினர், கொலைஞர்,
புலையர் முதலியோரிடம்

பசுக்களையேனும் கன்றுகளையேனும் விற்பது
பெரும் பாதகம் ஆகும்.

விலைக்குப்பெற்றவன் செய்யும் பாதகத்துக்கு
விற்றவனும் பொறுப்பாளியாவான் என்பது
நூற்றுணிபும் உண்மையுமாம். நோய்ப்பசு,
மூப்புடையபசு, இளைத்தபசு முதலியவற்றை
விற்பதும், அதனால் வரும் சிறு ஊதியத்தைப்
பொருளாக எண்ணுவதும் பாவம் ஆகும்.
அவற்றையும் பால்வற்றிய பசுக்களையும்
உடையவர்கள் தாமே வைத்துக்காப்பாற்றுதல்
கடமையாகும். தம்மால் இயலாத போது
காக்கக்கூடியவர்களிடம் ஒப்புவித்தலே
முறையாகும். மக்கள் இவற்றை அறிந்து திருந்த
முயல்வார்களானால் நாட்டுக்கு நலமும் நமக்கு
நன்மையும் தேடிக்கொண்டவராவர்.

**சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார்**

நன்றி
**சண்டேஸ்வரர் புராண விளக்கம்.**

# உயர்தரப் பெறுபேறு விவகாரம் அடுத்த வாரம் கூடி ஆராய்வு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையின் மாவட்டப் பெறுபேறுகள் தொடர்பிலான பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பற்றி முன்வைத்துள்ள பரிந்துரைகள் தொடர்பில் அடுத்த வாரமளவில் கூடி ஆராயவுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் பல்கலைக்கழக மாணவர் அனுமதிக்கான வழிமுறையை சமர்ப்பிக்கின்ற போது, புத்திஜீவிகளின் ஆலோசனைகளையும் பெறுவதற்கு பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென நிபுணர் குழு பரிந்துரை செய்திருந்தது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இது வரை தமக்கு கிடைக்கப்பெறவில்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தொடர்பில் நிபுணர் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை ஆராய்ந்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான கடப்பாடு இருக்கிறது.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்கனவே புத்திஜீவிகள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## கட்டார் அமீர் கொழும்பு வருகை



கட்டார் அமீர் ஷேக் ஹமட் பின் கலீபா அல் தானி இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இலங்கை வந்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கட்டார் அமீரை வரவேற்றார். இதேவேளை, கட்டாரைச் சேர்ந்த உயர்மட்ட வர்த்தகக் குழுவொன்றும் நேற்றுக்காலை இலங்கை வந்துள்ளது.

## கூட்டமைப்புடனான...

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கைக்கும், ஐக்கிய நாடுகள்சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கும் இடையில் காணப்படுவது வானத்துக்கும் பூமிக்குமுள்ள இடை வெளியாகும். ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எந்தவிதமான அடிப்படையும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் அடுத்த கட்டம் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது. அதன் போது கடந்த காலங்களில் இணக்கப்பாட்டிற்கு வரமுடியாது போன விடயங்கள் பற்றி அங்கு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காணி தொடர்பான அதிகாரங்கள், பொலிஸ் அதிகாரங்கள், வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைப்பது போன்ற முக்கியமான தலைப்புக்கள் தொடர்பாக இக்கலந்துரையாடல்களில் கவனம் செலுத்தப்படும். இந்த விடயங்களில் இரு தரப்பினருக்கிடையே பெரும் முரண்பாடுகள் உள்ளன. அதனால் இறுதியாக நாம் ஒரு இணக்கப்பாட்டிற்கு வர வேண்டியுள்ளது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது தனிப்பட்ட கருத்துக்களை விட்டுவிட்டு நடுநிலையான முறையில் வடக்கிற்கும் தெற்கிற்கும் நன்மை பயக்கக்கூடிய சிறந்த ஒரு தீர்வை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். எந்த நேரத்திலும் தான் மட்டும் சரி என்ற கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டிருப்பதால் பலனைப் பெற்றுக் கொள்ள முடியாது. சரியான ஒரு நிலைப்பாட்டுக்கு வந்து தாமும் அடுத்த தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு இடத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டும். அதன் மூலமே பேச்சுவார்த்தை செயன்முறையை வெற்றிகரமான முறையில் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தைப்பொங்கல்...

ஏற்பட்டுள்ளது.

கடை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த வேளை அயல் கடைக்காரர் தீச்சுவாலையைக் கண்டவுடன் கடை உரிமையாளருக்கும்,. யாழ். மாநகர சபை தீயணைப்பு படையினருக்கும் தகவல் தெரிவித்துள்ளார். தகவலை அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக அழகுசாதன விற்பனை நிலைய உரிமையாளர் தெரிவிக்கையில், காலையில் கடைக்குள் தீபம் ஏற்றி வைத்து விட்டு அணைத்துச் சென்றதாக தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகரசபை முதல்வர், யாழ்.போக்குவரத்துப் பொலிஸார், 512 ஆவது படைப்பிரிவின் படைத்தளபதி ஆகியோர் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டுள்ளனர். (எஸ்)

## போர்க்குற்றங்களை..

நகர்வுகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் வன்னிப் பிரதேச கிளைக் கூட்டம் நேற்று முன்தினம் வவுனியாவில் இடம் பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனநாயக அரசாக சொல்லப்படும் இலங்கை அரசாங்கம் போர்க்குற்றங்கள் தொடர்பில் உரிய வகையில் பொறுப்புக்கூற வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு பதிலாகவே உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அரசாங்கம் தயாரித்தது. எனவே போர்க் குற்றங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளவே அரசாங்கம் முயற்சி களை மேற்கொள்ளும்.

ஆகவே நாமும் போர்க்குற்றங்களை மட்டும் நம்பிக் கொண்டிருக்க முடியாது. அதனால் மட்டும் எமக்கு அரசியல் தீர்வு கிடைத்து விடும் எனவும் எண்ணி விடவும் முடியாது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் நாம் இராஜதந்திர ரீதியாக செயற்பட வேண்டும். ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நூற்றாண்டு விழாவிற்கு சென்ற போது இவ்விவகாரம் தொடர்பில் ஆபிரிக்கத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடினோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இன்று...

செய்யவுள்ள அவர் இந்திய நிதியுதவியுடன் அரியாலையில் அமைக்கப்பட்டுள்ள இந்திய வீட்டுத்திட்டத்தையும் பயனாளிகளிடம் கையளிக்கவுள்ளார். அத்துடன் காலிக்குச் செல்லும் அவர், இந்திய நிதியுதவியுடன் தென்பகுதிக்கான ரயில் பாதை அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்விலும் கலந்துகொள்வாரென இந்தியத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

# கடந்த ஒன்றரை மாதத்தில் பதினொரு பேர் கடத்தல்

(கொழும்பு)

கடந்த 40 நாட்களில் சுமார் 11 பேர் வெள்ளை வானில் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்று வரும் கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல்சம்பவங்கள் குறித்து விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமற் போதல் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன், பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் தெரி வித்துள்ளார்.

சட்ட மா அதிபராக கடமையாற்றிய சந்தர்ப்பத்தில் காணாமற் போன ஊடகவியலாளரான பிரகீத்எக்நெலிகொட வெளிநாடொன்றில் வசிப்பதாக தமக்கு தகவல் கிடைத்ததாகவும், அது தொடர்பில் விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரகீத் காணாமல் போதல் சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுவில் தாம் சாட்சியமளிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த இரண்டு ஆண்டுகளில் வடக்கு கிழக்கில் மட்டும் சுமார் 500 இற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளதாக நாம் இலங்கையர் அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் உதுல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் 110 பேரும், மன்னார் மாவட்டத்தில் 100 பேரும், வவுனியாவில் 140 பேரும், ஏனையவர்கள் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் காணாமல் போயுள்ளனர்.

அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மீனவர்கள்உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

காணாமல் போனோர் பற்றிய தகவல்கள் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை இந்த காணாமல் போதல் சம்பவங்களுக்கு அரசாங்கமே பொறுப்பு சொல்லவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மதிலுடன்...

வந்தபோது மோட்டார் சைக்கிளின் ஹான்ரிலில் மிளகாய்ப் பை சிக்கியதால் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் அமைக்கப்பட்டிருந்த வீட்டு வாசலின் மதிலில் மோதியது.

இதனால் தலையில் அடிபட்டு பலத்த காயமேற்பட்ட அவரை அயலவர்கள் ஆட்டோவில் வைத்தியசாலைக்கு ஏற்றிச்சென்ற போது இடைவழியில் அவர் இறந்துள்ளதாக வைத்தியசாலை அறிக்கை தெரிவிக்கிறது. சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் எஸ்.ஐ. சுவீரா, சில்வா, கேரா ஆகியோர் கொண்ட குழு விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். பிரேத பரிசோதனைக்காக சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (12, 18)

## முஸ்லிம்களின்..

மற்றுமோர் இனம் புறந்தள்ளப்படக்கூடாது. இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று முன்வைக்கப்படும் போது, அது மூவினங்களுக்கும் சமமானதாக அமைய வேண்டும். இதுவே மறைந்த தலைவர் அஷ்ரப்பின் கோட்பாடாகும். இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்கும் இடம் கிடையாது. அரசு - கூட்டமைப்பு பேச்சுவார்த்தை என்பது முத்தரப்பாக அமையுமாயின் தீர்வு இலகுவாக அமையும். இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது ஓர் இனத்திற்கு மட்டும் சொந்தமானதாக அமையக் கூடாது.

அரசு - கூட்டமைப்பு பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தரப்பு பங்குபற்றுவதை கூட்டமைப்பு ஒருபோதும் எதிர்க்கப்போவதில்லையென தம்மிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்...

இந்த விழாவில், கடந்த மூன்று தினங்களும் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை அமைச்சர், ஆளுநர் வழங்கிக் கௌரவித்தனர்.

அத்துடன், யாழ்ப்பாணத் திருவிழாவை சிறப்பான முறையில் திட்டமிட்டு நடத்தி முடித்தமைக்கு உதவி செய்தமைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் சேவையைப் பாராட்டியும் ஆசிரியர் இரா.செல்வவடிவேல், அவர்களுக்கான பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன், மாநகர முதல்வரால் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

இறுதியாக திருமறைக் கலாமன்றம், பாடசாலை மாணவர்கள், உள்ளூர்க் கலைஞர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## பிரயாணத்திற்கு தடை

பிரயாணத்துக்கு பொருத்தமற்ற வாகனங்கள் இனிவரும் காலங்களில் அதிவேக நெடுஞ்சாலையில் உட்பிரவேசிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வீதியில் பிரவேசிக்கும் வாகனங்களில் முக்கியமாக பக்கக் கண்ணாடிகள், பிரதான விளக்கு மற்றும் டயர்கள் நல்ல நிலையில இருக்கின்றனவா என பரிசோதிக்கப்படுவதாகவும், அவை பிரயாணத்துக்கு பொருத்தமற்ற நிலையில் இருப்பின் அவ்வாகனத்துக்கு அதிவேக நெடுஞ்சாலையில் செல்வதற்கான அனுமதி மறுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரயாணத்துக்கு பொருத்தமற்ற வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலையில் செல்வதால் ஏற்படும் விபத்துக்களை குறைப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## கௌரவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பௌத்த அமரபுர நிகாயவினால் சர்வசமய சமாந்திரய விபூசண தேசபிமாண்ணி லங்காபுத்ர கௌரவ பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பௌத்த பிக்குகளின் பங்கு பற்றலுடன் கண்டி புஸ்பதான மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அமைச்சர் ஹக்கீம் கௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை, கண்டி மாவட்டத்தில் சமூக சேவையில் ஈடுபட்டு கொண்டிருக்கும் பௌத்த பிக்குகள் உள்ளிட்ட 100 பேருக்கு சமாதான நீதவான் பதவிகள் இந்நிகழ்வில் வழங்கப் பட்டன.

# ஈரான் மீதான மேற்குலகின் அழுத்தம் இலங்கையைப் பாதிக்குமா?

## ஆராய்கிறது வெளிவிவகார அமைச்சு

ஈரானிய எண்ணெய் விநியோகத்திற்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்துள்ள தடையினால் இலங்கைக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா? என்பது தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு ஆராயவுள்ளது.

இலங்கை ஈரானில் இருந்து மசகு எண்ணையை இறக்குமதி செய்வதினால் இது முக்கியத்துவம் பெறுவதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கான மசகு எண்ணெய் முழுவதும் ஈரானில் இருந்தே பெறப்படுகிறது.

சப்புகஸ்கந்தையில் உபயோகிக்கப்படும் ஈரானிய மசகு எண்ணெய் கந்தகத்தையும் கொண்டிருப்பது சுத்திகரிப்பு நிலையத்திற்கு ஏற்றவகையில் அமைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை,

ஈரான் மீது அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் பிரயோகித்துவரும் அழுத்தங்கள் இலங்கையை பாதிக்கக் கூடிய அபாயமுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இலங்கை, எண்ணெய் இறக்குமதியில் ஈரானை பெரிதும் நம்பியிருப்பதனால் இந்த நெருக்கடி நிலை ஏற்படக்கூடும்.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத தேய நாடுகள் ஈரான் மீதான பொருளாதாரத் தடையைக் கடுமையாக்கினால், இலங்கையினால் எண்ணெய் இறக்குமதி செய்ய முடியாதுபோகும் என இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் தினமும் சுத்திகரிக்கப்படும் மசகு எண்ணெய்க்கு ஈரானின் மசகு எண்ணெய்யையே இலங்கை நம்பியிருக்கின்றது.

ஈரானின் அதிகளவு சல்பர் செறிந்த கனமான மசகு எண்ணெயை சுத்திகரிக்கும் வகையிலேயே சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. சகல விதமான மசகு எண்ணெய் வகைகளையும் சப்புகஸ்கந்தவில் சுத்திகரிக்க முடியாது என இலங்கையின் பெற்றோலியத் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வது தடைசெய்யப்பட்டால், அமெரிக்கா இலங்கைக்கு சில சலுகைகளை வழங்கக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது, எனினும், அரசாங்கத்தின் மீது மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் அமெரிக்கா குற்றம் சுமத்தி வருவதால், ஈரான் மீதான பொருளாதாரத் தடையை எதிர்க்கும் சீனா, ரஷ்யாவுடன் இலங்கை நெருங்கிய உறவுகளைப் பேணிவருகின்றது.

இத்தகையதொரு பின்னணியில் அமெரிக்காவின் சலுகைகளை இலங்கையினால் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது சந்தேகமே இவ்விகாரம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அவசரப்பட்டு தீர்மானங்களை எடுக்காது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார் என ரொய்ட்டர்ஸ் செய்திச்சேவை மேலும் தெரிவித்துள்ளது.

# பேச்சுவார்த்தையில் முன்னேற்றமில்லையாம் கிருஷ்ணாவிற்கு விளக்கும் கூட்டமைப்பு

அரசாங்கத்துடன் நடத்தப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றமின்மை குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவிற்கு விளக்கமளிக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய வெளிவிவகார அமைச்சரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக எம்மால் கருத முடியாது. தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. தீர்வுத்திட்டத்தை எட்டுவதற்காக கால வரையறை குறித்த யோசனைத்திட்டத்திற்கு அரசாங்கம் இதுவரையில் சாதகமான பதில் எதனையும் அளிக்கவில்லை.

ஏதேனும் ஸ்திரமான இணக்கப்பாட்டை எட்டும் வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கான தமது பிரதிநிதிகளை பெயரிடாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாண திருவிழா 2012 இன் இறுதி நாளான நேற்று இடம்பெற்ற கலைநிகழ்வில் சிறுவன் ஒருவன் நடனமாடுவதையும், சிறந்த தமிழன் தமிழச்சியாகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸ் மற்றும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் காணலாம். (பா.சிகான்)

# கூடுதல் அதிகாரத்தை உருவாக்கினால் அநாவசிய அழுத்தங்கள் ஏற்படும்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை விட கூடுதல் அதிகாரம் உடைய நிறுவன கட்டமைப்பை உருவாக்குவதன் ஊடாக அனைத்து அரச பல்கலைக்கழங்களும் அநாவசிய அழுத்தங்களுக்கு இலக்காவதாக அரச, வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இதற்கான உத்தேச சட்டத்தின் மூலம் இலங்கை வைத்திய சபைக்கு மேலாக அதிகாரம் உடைய நிறுவனம் ஒன்று உருவாகலாம் என அந்த சங்கத்தின் பிரதி செயலாளர் டொக்டர் உபுல் குணசேகர குறிப்பிட்டார். உத்தேச தனியார் பல்கலைக்கழக சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு தீர்மானித்துள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக குழுவிற்கு மேலாக உள்ள நிறுவனம ஒன்று ஆணைக் குழுவின் அதிகாரங்களை எவ்வாறு பயன்படுத்தபோகின்றது என்பதில் தெளிவின்மை காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படை அற்றவை என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயரத்ன கூறினார்.

உயர்கல்வியை போதிக்கின்ற பல தனியார் நிறுவனங்கள் இயங்கி வருகின்றதுடன் அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான அவசியம் நிலவுகின்றதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Valai வலை
சமகால பொது அறிவுத் தொகுப்பு
டிசம்பர் மாத இதழ் வெளிவந்துவிட்டது
இதழ் 03
குடாநாட்டின் முன்னணி
புத்த நிலையங்களில் கிடைக்கும்
தொகுப்பாசிரியர் - சி.என்.எச்.சாள்ஸ்
(C/1527)

# இந்திய வெளிவிவகார அமைச்சருடன் நாளை பேச்சு நடத்துவார் ரணில்

(கொழும்பு)

இலங்கைக்கு இன்றைய தினம் வருகைதரவுள்ள இந்திய வெளிவிவகாரச் செயலர் எஸ்.எம். கிருஷ்ணாவை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் மட்டக்குழு நாளைய தினம் சந்திக்கவுள்ளது.

இதன்போது, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்துவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என கிருஷ்ணாவிடம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்துவார் என ஐக்கிய தேசியக் கட்சி தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, எதிர்வரும் பெபரவரி மாதத்தில் முல்லைத்தீவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தலைமையிலான குழு அங்கு அனைத்து பிரதேசங்களினதும் மக்களினதும் குறைநிறைகளை கண்டறிந்து வெளிக்கொணர்வதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

# மருந்து பற்றாக்குறைக்கு தீர்வுகாண குழு நியமனம்

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் நிலவும் மருந்துப் பொருட்கள் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பதற்காக ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித மஹிபால உட்பட அதிகாரிகள் குழுவொன்று கடந்த வாரத்தில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு நேரில சென்று இந்த பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்தது.

வைத்தியசாலைக்கான மருந்துப் பொருட்கள் தொடர்பாக தொடர்நதும் கண்காணிப்பதற்காக அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த காலப் பகுதியில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் மருந்துப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கு பற்றாக்குறை நிலவியதால் நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர். வட மத்திய மாகாணத்தின் பிரதான வைத்தியசாலையாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலை இருப்பது குறிப்பிடத்தக்கது.

# தபாற்கட்டணத்தை அதிகரிக்கத் திட்டம்

தேசிய தபால் கட்டணங்களை உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கட்டண உயர்வு குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு அது தொடர்பிலான பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாகத் தபால் அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

தபால் அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவர் உள்ளிட்ட ஆறு பேர் இந்த குழுவில் அங்கதுவம் வகிக்கின்றனர்.

சாதாரண கடிதம் ஒன்றுக்காக அறவிடப்படும் ஐந்து ரூபா கட்டணத்தை பத்து ரூபா வரை உயர்த்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# செல்வபுரத்தில் ஒரே இரவில் ஆறு வீடுகளில் கொள்ளை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு செல்வபுரத்தில் ஒரே இரவில் ஆறு வீடுகளில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நேற்று முன்தினம் இரவு நள்ளிரவுக்குப் பின்னர் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மீன் வியாபாரி ஒருவரின் வீட்டில் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த மூன்றரைப் பவுண் நகையையும் 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நித்தி என்றழைக்கப்படும் சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளரின் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசியைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை இப்பகுதியில் மேலும் நான்கு வீடுகளில் புகுந்த திருடர்கள் வீட்டில் உள்ள பொருட்களைச் சேதப்படுத்தியதுடன் அங்கு நகை, பணம் என்பன அகப்படாததால் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர். (04)

# சட்டரீதியற்ற அரசியலில் ஈடுபட்டால் முன்னாள் போராளிகள் கைதாவர்

## புனர்வாழ்வு ஆணையாளர் தகவல்

முன்னாள் புலிபோராளிகள் அரசியலில் ஈடுபடுவதற்கு எவ்வித தடையும் கிடையாது என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சந்தன ராஜகுரு தெரிவித்துள்ளார். இவர்கள் அனைவரும் சட்டரீதியான முறையில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்துவோருடன் இணைந்து செயற்படும் முன்னாள் புலிபோராளிகள் கைது செய்யப்படுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார். புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ள முன்னாள் புலிபோராளிகள் குறித்து இராணுவத்தினர் உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களுடன் முன்னாள் புலிகள் இணைந்து செயற்படுவதாக அண்மையில் உந்துல் பிரேமரட்ன வெளியிட்ட கருத்திற்கு பதிலளிக்கும் வகையில்அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஜனவரி 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.